தீபம் புகழ் கே.பி. வித்யாதரன் எழுதிய
குருப்பெயர்ச்சி பலன்கள் உள்ளே

52

October 2007



# தமிழர் தகவல்

இலண்டன்

Tamils' Information



12.10.2007 வெள்ளிக்கிழமை
நவராத்திரி பூஜை ஆரம்பம்




Wembley-ல் தமிழர் தகவல் கிடைக்குமிடம்

Malar Supermarket
Tel : 020 8795 5797

Tharani Jewellery
Tel : 020 8902 7111, 8902 6777

Happy Tex
Tel : 020 8903 0782


மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


JK Gold House
&
Fashion House
3வது
வருட நிறைவை முன்னிட்டு அக்டோபர்
22ஆம் தேதியிலிருந்து 29ஆம் தேதி வரை நடைபெறும்
விசேட அதிரடி கழிவு விற்பனையில்
அனைவரும் கலந்துகொள்ளுங்கள்
314-316 London Road
Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577
Fax : 022 8684 4677

# தமிழர் தகவல் Tamils' Information

திருவள்ளுவர் ஆண்டு 2038
சர்வஜித்து – ஐப்பசி

மலர் : 05

இதழ் : 52
அக்டோபர் 2007

" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." – குறள்

## முரண்பாட்டின் மொத்த உருவம்

ஈழத்தில் போர் நிலவரம் ஒவ்வொரு நாளும் மோசமாகிக் கொண்டே போவதைச் செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்களின் வழி அறிய முடிகிறது.

சிறீலங்கா அரசு ஒரு நாளுக்கு ஒரு விதமாய் பேசுகின்றது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக ஒரு நாள் செய்தி அளிக்கிறது. மறுநாளே, வவுனியா தொடங்கி வடக்குப் பகுதி முழுவதும் முப்படைத் தாக்குதல் நடத்தப் போவதாக அறிவிக்கின்றது.

உலக நாடுகளிடம் நல்ல பெயர் வாங்குவதற்குப் பேச்சுவார்த்தை அறிவிப்பு, சிங்கள இனவெறியர்களை ஊக்கப்படுத்துவற்காக போர் அறிவிப்பு என இரட்டை வேடம் போடுகிறது சிறீலங்கா அரசு. இதனைச் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன் நிற்காமல், முன்னுக்குப்பின் முரணான அரசின் நிலைப்பாட்டைக் கண்டிக்கவும் முன்வர வேண்டும்.

எந்தவிதமான மனித உரிமை மீறலிலும் தான் ஈடுபடவில்லை என்னும் பச்சைப் பொய்யைக் கூசாமல் கூறும் சிறீலங்கா அரசு, ஐ.நா சபையிலிருந்து வந்த பார்வையாளர்களை, வவுனியா பகுதிக்குள் அனுமதிக்க மறுத்தது ஏன்? மடியில் கனமில்லாதவர்களுக்கு வழியில் பயம் எதற்காக?

மகிந்த ராஜபக்சேயின் இனவெறிப் போக்கு, உலக நாடுகளுக்குப் புரியாமல் இல்லை. ஆனாலும் தங்களின் சொந்த நலன்களைக் கணக்கில் கொண்டு, அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசுகள் அமைதி காக்கின்றன.

இன்னொருபுறம், இனவெறி அரசுக்குச் சில நாடுகள் ஆயுதங்களையும் வழங்கி ஆதரிக்கின்றன. அந்தப் பட்டியலில் இந்தியா இருந்துவிடக் கூடாது என்பது ஈழ மக்களின் வேண்டுதலாகவும், விருப்பமாகவும் உள்ளது.

ஈழச் சிக்கலைப் பொறுத்தமட்டில், அண்டை நாடான இந்தியாவின் நிலையை அனைத்து நாடுகளும் கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. இந்திய அரசின் ஒவ்வொரு அசைவும், ஈழத்தில் ஒரு தாக்கத்தை உண்டுபண்ணக் கூடியதாகவே உள்ளது.

தங்கள் மண்ணின் விடுதலைக்காகவும், கௌரவமான சுதந்திரமான வாழ்விற்காகவும் போராடும் ஈழ மக்களின் வாழ்வுரிமை போராட்டத்தை ஆதரிக்காவிட்டாலும், அதற்கு நெருக்கடிகளைக் கொடுக்காமலேனும் உலக நாடுகள் அமைய வேண்டும். ஆனால் இன்று அவுஸ்திரேலிய, ஐரோப்பிய நாடுகள் பல்வேறு வகையான நெருக்கடிகளைப் போராடும் இயக்கத்திற்குக் கொடுத்து வருகின்றன. அனைத்தையும் மீறியே போராட்டப் பாதையில் நடைபோட வேண்டிய தேவையில் நாமும், நம் நாடும் உள்ளோம்.

மூன்று தலைமுறைகளாகக் களத்தில் நிற்கும் ஒரு சமூகம், முன்னுக்குப் பின் முரணாகப் பேசும், ஈவிரக்கம் அற்று இனப் படுகொலை செய்யும் ஒரு கொடுங்கோல் அரசைத் தன் உறுதி அனைத்தையும் திரட்டி எதிர்த்துப் போராட வேண்டிய தருணம் இது

முகவரி :
41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 3320

Email :
jothy5@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

கணினி, அச்சுப்பதிப்பு :
தமிழர் தகவல்

Computering & Printing :
Thamizhar Thagaval

படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே

4000 பிரதிகள்

# ஈழம் நோக்கி நீளும் கைகள்

கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் களத்தில் நிற்கும் ஈழ மக்கள் ஏராளமான துயரங்களை எதிர்கொண்டுள்ளனர். ஓயாத போர், உறக்கமில்லாத இரவுகள், ஓடித்திரியும் வாழ்க்கை என்றுஅந்த மக்கள் படும் துயரம் இதயமுள்ள எவரையும் இளக வைக்கும்.

வாழ்நாளெல்லாம் போராடும் அவர்களுக்கு வாய்மொழி ஆதரவுஅளிப்பது கூடக் குற்றமென்று தமிழ்நாட்டில் பலரைப் பொடா சட்டத்தில் போட்டது ஜெயலலிதா அரசு. இன்றைக்கு அந்நிலை மாறியிருக்கிறது என்றாலும், இப்போதும் ஈழத்துயரை எண்ணிப் பார்க்காத அரசாகவே இந்திய அரசு உள்ளது.

ஏழெட்டு மாதங்களுக்கு முன்பு, பழ. நெடுமாறன் அவர்கள் தலைமையில், பல்வேறு தமிழ் அமைப்பினரும் ஈழ மக்களுக்காக உணவுப் பொருள்களையும் மருந்துப் பொருள்களையும் தமிழ்நாட்டில் திரட்டத் தொடங்கினர். ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் திரண்டதாகக் கூறிய அவர்கள், அவற்றை முறைப்படி செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அனுப்ப முயன்றனர்.அதற்காக மத்திய அரசிடம் அனுமதி கோரினர். தில்லியில் இருந்து எந்த அனுமதியும் வராத காரணத்தால் கோரிக்கையை வலியுறுத்திக் கூட்டங்கள், மாநாடுகள், உண்ணாநிலைப் போராட்டங்கள் என்று நிகழ்வுகள் தொடர்ந்தன.

## நெகிழ்வுகளும் சில நெருடல்களும்



**சுப. வீ**

உணவும், மருந்தும் உலகின் பயங்கரமான ஆயுதங்கள் என்று எந்தச் சட்டமும் இன்று வரை சொல்லவில்லை. ஆனாலும் இந்திய அரசு குறைந்தபட்ச மனிதநேயம் கூட இல்லாமல் நடந்து கொண்டது. நாள்கள் செல்லச் செல்ல திரட்டிய பொருள்கள் கெடத் தொடங்கின. இந்நிலையில்தான் கடந்த 12ஆம் தேதி காலை ஒரு குழு நாகையில் இருந்தும், இன்னொரு குழு இராமேஸ்வரத்தில் இருந்தும் பொருள்களை ஏற்றிக் கொண்டு ஈழத்தை நோக்கிப் படகுப் பயணம் செல்வதாக அறிவித்திருந்தனர்.

படகு உரிமையாளர்களைத் தமிழக அரசு மிரட்டுவதாகக் கூறி இரண்டு ஊர்களிலும் உண்ணாநிலைப் போராட்டங்கள் தொடங்கின. நெடுமாறன் சாகும்வரை பட்டினிப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்தார். இரண்டு இடங்களிலும் அனைவரும் கைது செய்யப்பட்டு மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

மறுநாள் காலையில் சென்னையில் உள்ள தனியாருக்குச் சொந்தமான இடத்தில் பட்டினிப் போரைத் தொடருவதாக நெடுமாறன் அறிவிக்க, பரபரப்பான நிலைமைப் பற்றிக் கொண்டது. ஒரு விபத்தில் சிக்கி கால் எலும்பு முறிவுக்கு உள்ளாகி இருந்த நான் திராவிட இயக்க தமிழர் பேரவையின் சார்பில் இதுகுறித்து ஏதேனும் செய்திட வேண்டும் என்று கருதினேன். செப்டம்பர் 13 ஆம்நாள் மதியம் 1.30 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு என் கவலையை வெளிப்படுத்தினேன். ''அப்பாவிடம் பேசிவிட்டு மீண்டும் உங்களைத் தொடர்பு கொள்கிறேன்'' என்றார் அவர். அடுத்த பத்தாவது நிமிடமே அவரிடம் இருந்து தொலைபேசி வந்தது. அப்பாவே உங்களிடம் பேசுகிறார்கள் என்றார்.

''நான் என்னப்பா செய்யனும்?'' என்று கரகரத்த குரலில் முதலமைச்சர் கேட்க, நியாயமான கோரிக்கை என்பதால் நீங்கள் தலையிட்டு ஆவண செய்ய வேண்டும் என்று பணிவாகக் கேட்டுக் கொண்டேன். நான் யாரையும் எப்போதும் சந்திக்கத் தயங்கியதே இல்லை. தாராளமாக அவர்களை வரச்சொல், சந்தித்துப் பேசுகிறேன். வேண்டியதைச் செய்கிறேன் என்று சொன்னார். மிகுந்த மகிழ்ச்சியுடன், பட்டினிப் போராட்டப் பந்தலில் இருந்த விடுதலைச் சிறுத்தைகளின் அமைப்பாளர் தொல். திருமாவளவனைத் தொடர்பு கொண்டு செய்திகளை விளக்கினேன். நல்ல முயற்சி என்று சொன்ன அவர், நெடுமாறன் அய்யாவிடம் பேசுவதாகக் கூறினார்.

அன்று மாலை கவிஞர் காசி ஆனந்தன் தொடர்புகொண்டு மீண்டும் ஒரு முயற்சி செய்யலாம் என்றார். என்ன செய்யலாம் என்று எனக்கும் பிடிபடவில்லை. இரவு 11 மணியளவில் ஒருவார இதழ் அலுவலகத்தில் இருந்து எனக்குத் தொலைபேசி வந்தது. சேலத்துக்குப் பயணமாகிக் கொண்டிருந்த முதலமைச்சர் தொடர்வண்டியில் இருந்தபடியே நெடுமாறன் அய்யாவிற்குத் தன் கைப்பட ஒரு கடிதம் எழுதி அனுப்பி உள்ளதாகவும், அதனை அவரிடம் தெரிவித்துப் போராட்டத்தை முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளும்படியும் கூறினர். கடிதத்தையும் தொலைபேசியில் படித்துக் காட்டினார். உடனே நான் கவிஞர் காசி ஆனந்தனைத் தொடர்பு கொண்டு செய்தியை விளக்க அவரும், நண்பர் சௌரிராசனும் அவரைச் சந்தித்துப் போராட்டத்தைக் கைவிடும்படிக் கேட்டுக் கொண்டனர். இரவு 12 மணிக்கு கவிஞர் என்னைத் தொடர்பு கொண்டு உண்ணாநிலையைக் கைவிட அய்யா மறுக்கிறார் என்று சொன்னார். எனக்கு அது பெரும் ஏமாற்றமாக இருந்தது.

உங்கள் உறவுகளுக்கு உலகின்
எப்பாகத்துக்கும்
பணமாற்றீடு செய்ய சிறந்த நிறுவனம்

# ABBY & CO



125 Mitcham Road, Tooting, SW17 9PE
Tel : 0208 672 0266

இரண்டாவது கிளை

367, London Road, Croydon, CRO 3PB
Tel : 0208 6897555

எங்கள் புதிய முகவரிக்கு
வாருங்கள்
Smith Brothersக்கு அருகில்

விடுமுறையை கழிக்க
சென்னைக்கு
போறீங்களா ?









வசதியாக குடும்பத்தோடு தங்க
Non A/c Flatகள்
A/c Flatகள்
திருமணத்தை
நடாத்துவதற்கான
ஏற்பாடுகள் வாகன
வசதிகள் அனைத்துக்கும்
தொடர்புகட்கு
**M SRI 07801227110**

மறுநாள் காலை நான், கயல் தினகரன், அன்புத் தென்னரசன் மற்றும் பேரவைத் தோழர்கள் சிலர் நேரில் சென்று வேண்டிக் கேட்டுக் கொண்டோம். ''போராட்டக் குழு கூட இருக்கிறது. அதில் பேசி முடிவு சொல்கிறோம்'' என்று அய்யா கூறினார். அப்போது அங்கு ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, சட்டமன்ற உறுப்பினர் செல்வப் பெருந்தகை உள்ளிட்ட பலர் இருந்தனர். அனைவரும் எங்களை அன்போடு வரவேற்றுப் பேசினார். ஒரு தனியறையில் போராட்டக்குழு கூடியது.

கூட்டம் முடிந்து மூன்று மணி நேரத்திற்குப் பிறகு போராட்டம் தொடரும் என்று அறிவித்தனர். அய்யாவின் உடல்நிலை மணிக்கு மணி மோசமாகிக் கொண்டிருக்க, அடுத்து என்ன நடக்குமோ என்னும் அச்சம் அனைவரையும் பற்றிக் கொண்டது.

எவ்வாறோ யாரும் எதிர்பாராத ஒரு தருணத்தில் 15 ஆம் தேதி மதியம் 3.15 மணிக்கு மருத்துவர் இராமதாஸ் நேரில் வந்து, கலைஞரின் சார்பாகவும், தன் சார்பாகவும் அளித்த உறுதியின் பேரில், அய்யா தன் போராட்டத்தை முடித்துக் கொள்ள, அனைவரிடமிருந்தும் ஒரு நிம்மதிப் பெருமூச்சு வெளிப்பட்டது. அதே வேளை மீண்டும் அய்யாவின் உடல்நிலை இயல்புநிலைக்குத் திரும்ப இன்னும் எத்தனை நாளாகுமோ என்ற கவலையும் மீதமிருந்தது.

எடுத்த செயல் இன்னும் முழுமையாய் நிறைவு பெறவில்லை என்றாலும், இந்தப் போராட்டம் தமிழக மக்களிடையே சில உணர்வு அலைகளை ஏற்படுத்தவே செய்திருக்கிறது. ஈழத்தில் வாடும் நம் உறவுகளுக்கு உணவும், மருந்தும் கொடுப்பதில் என்ன தவறு என்ற கேள்வி எல்லோருக்குள்ளும் முளை விட்டுள்ளது. அவற்றை அங்கு விரைவில் கொண்டு சேர்க்க அனைவரும் துணை நிற்க வேண்டும் என்ற எண்ணமும் எழுந்துள்ளது. இவ்வாறு நல்ல பல தூண்டுதல்களுக்குக் காரணமாக இருந்த இப்போராட்டம் பற்றிய சில நெருடல்களும் என்னுள் இருக்கவே செய்கின்றன.

போராட்டத்தை முடிக்க மறுத்த 14 ஆம் தேதிக்கும், முடித்துக் கொண்ட 15 ஆம் தேதிக்கும் இடையில் கோரிக்கை அடிப்படையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. தமிழக முதல்வரிடமிருந்து எழுத்து மூலம் வந்த உறுதிமொழியை மறுத்துவிட்டு, மருத்துவர் இராமதாசு அவர்கள் மூலம் வாய்மொழியாக வந்த உறுதிமொழியை ஏற்றுக் கொண்டதற்கு என்ன காரணம்? அய்யாவின் உடல்நிலை மோசமடைந்ததால் அப்படி ஒரு முடிவை எடுக்க நேர்ந்திருக்கலாம். அதில் பிழை ஒன்றும் இல்லை. ஆனால் முதல் நாளே அந்த முடிவை எடுத்திருந்தால் அது அனைவருக்கும் மகிழ்ச்சியையும், பெருமையையும் தந்திருக்கும்.

இது ஒன்றும் ஈழத்திற்கு ஆதரவைத் திரட்டுவதற்கான இறுதிப் போராட்டமன்று. இன்னும் எத்தனையோ தளங்களில் நாம் பணியாற்ற வேண்டியுள்ளது. தமிழக அரசையும், இன்றைய முதல்வரையும் அரவணைத்துக் கொண்டு போவதின் மூலம் அந்தப் பணியை நாம் எளிதாக்கிக் கொள்ள முடியும். அதைவிடுத்து அவரை எதிர்த் திசைக்குத் தள்ளுவது உள்நாட்டு அரசியலுக்கு உதவலாமே அன்றி, ஈழ விடுதலைக்கு ஒரு நாளும் உதவாது.

இன்னொரு நிகழ்வையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.போராட்டப் பந்தலில் பெரும்பான்மையான நேரம் வைகோ அமர்ந்திருந்ததைக் காண முடிந்தது. அவர் ஈழ விடுதலையின் ஆதரவாளர் என்பதன் வெளிப்பாடாக அதனைக் கொள்ளலாம். ஆனால் பதினான்காம் தேதி நடைபெற்ற போராட்டக்குழு கூட்டத்திற்கு வைகோவும் அழைத்துச் செல்லப்பட்டதை நான் பார்த்தேன். குழுக் கூட்டத்தில் அவர் பேசினாரா, இல்லையா என்பது குறித்து நமக்கு எதுவும் தெரியாது. அவர் அக்குழுவில் உறுப்பினர் ஆக்கப்பட்டுள்ளாரா என்பதும் நமக்குத் தெரியாது. ஆனால் கூட்டம் முடிந்து அனைவரும் வெளிவரும் போதுதான் அவரும் வெளி வந்தார். மரியாதை நிமித்தமாக அவர் குழுக் கூட்டத்திற்கு அழைக்கப் பட்டிருக்கலாம் என்று கருதுவதற்கும் இடமில்லை. அவ்வாறாயின், அப்போது அங்கு இருந்த விடுதலைச் சிறுத்தையின் துணைப் பொதுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்வப் பெருந்தகையும் அதே போல் மரியாதை நிமித்தமாக அழைக்கப்பட்டிருப்பார் அல்லவா?

ஈழ ஆதரவில் வைகோ தமிழ் அமைப்புகளுடன் உடன்பாடு உடையவர் என்றாலும், தமிழகத்தில் அவருக்கென்று ஓர் அரசியல் இருக்கிறது. அவ்வரசியலின் அடிப்படையில்தான், பந்தலில் நின்றபடியே தி.மு.க அரசை, காட்டுமிராண்டி அரசு என்றும், பாசிச அரசு என்றும் அவர் விமர்சனம் செய்தார். அதனை ஜெயா தொலைக்காட்சி திரும்பத் திரும்ப ஒளிபரப்பி மகிழ்ந்தது. இந்நிலையில் அவரை உள்ளே வைத்துக் கொண்டு போராட்டம் தொடரும் என்னும் ஒரு முக்கியமான முடிவைப் போராட்டக்குழு எடுப்பது எந்த விதத்தில் நியாயமாகும்?

தி.மு.க அரசு விடுதலைப்புலிகளை ஆதரிக்க வில்லை என்பது வெளிப்படையான உண்மை. அதே வேளையில் ஈழ ஆதரவாளர்களையும், புலிகளின் ஆதரவாளர்களையும் ஜெயலலிதா அரசைப்போல வேட்டையாடவில்லை என்பதும் உண்மை. அந்த ஜெயலலிதா ஆட்சியில், ஈழத்திற்கு ஆதரவாக இப்படி ஒரு பெரும் போராட்டத்தை எந்த ஒரு தமிழ் அமைப்பும் முன்னெடுக்கவில்லை. மேடையில் ஆதரித்துப் பேசியதற்காக 1 1/2 ஆண்டு காலம் பொடாவில் இருந்து வெளியே வந்த பின்னும், ஏறத்தாழ 2 ஆண்டுகள் அய்யாவும், நானும், நண்பர்கள் சிலரும் பேச்சுரிமை அற்றவர்களாகவே இருந்தோம். இப்போதும் கூட அவருடைய ஆட்சி இருந்திருக்குமானால், பயணம் தொடங்குவதற்கே தடை விதிக்கப்பட்டிருக்கும். அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டிருப்பார்கள். எனவே, மாறியிருக்கும் இன்றைய சூழலைப் பயன்படுத்திக் கொண்டு, ஈழ மக்களின் விடுதலைப் போருக்கு நம் ஆதரவை மேலும் வலுப்படுத்திக் கொள்ளலாம் என்பதே என்றும் நம் விருப்பமாகும். ●

# BEST FOOD

4வது கிளை மிக விரைவில்

## வெம்பிளியில்

உங்கள் சகல தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதமாக



364 - 366, Bath Road
Hounslow
Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323

259 - 261, London Road
West Croydon
Surrey CRO 2RL
Tel : 020 8684 6269
Fax : 684 4677

249 Northolt Road
Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933

**VAANI**
தயாரிப்புகள்
எங்கள் நேரடி
விற்பனையில்



நாங்களே இறக்குமதி செய்து
நேரடியாக உங்களுக்கு தருகிறோம்.

இந்த நான்கு இடங்களைத் தவிர வேறு கிளைகள் எங்களுக்கு கிடையாது

# அடிவயிற்று சமிக்ஞைகள்

**ஆழியாள்**

உன் தாயும்
அவள் தாயின்
தாயின் தாயின்
தாயும்,
அவள் தாயும் இல்லாவிடின்
நீயும்
உன் மகள் வழிப்பேத்தியும்
அவள்தன் பேத்தியும்
அவளின் பூட்டியும்
எதனூடு கிளைத்திருக்க முடியும்?

சிலபொழுது எண்ணிப்பார்.

வானத்தின் வண்ணம் காண்பதற்கும்
வெறும் பெண்ணாய் நீ
மீளப்பிறந்து கற்பதற்கும் -
தொப்புள்கொடிகளின்
தொடர் சமிக்ஞைகளுக்கும்
தொடர்பு ஏதும் இல்லையா?

சிலபொழுது எண்ணிப்பார்.

ஒருவேளை....
அடிவயிற்று கொடிவேரின்
ஆரம்பம் நீ என
நினைத்திருந்தால்....
அல்லது
நம் முகம் பேண
முன்னோடிகளின் தொடர்ச்சி
எதற்கு என்ற
எண்ணமிருந்தால்....

எங்கே
ஒரு கையால்

உன் ஆத்துமத்தின் உயிர்தொட்டு
மறுகையால் சுட்டிக்காட்டு
நீ சுவைத்த கனியின்
மரத்தை.

ஏவாள் நீயே.

1998

**மாதமிரு திருக்குறள் கற்போம்**

## மெய்யுணர்தல்



***ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே***
***மெய்யுணர்வு இல்லா தவர்க்கு***

(குறள் : 354)

ஐம்புலன்களையும் அடக்கித் தன்வயப்படுத்தியவருக்கும் மெய்யுணர்வு இல்லையானால், அதனால் பயனில்லையாகும்.

***எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்***
***மெய்ப்பொருள் காண்பது அறிவு*** (குறள் : 355)

எப்பொருள் எத்தன்மையதாக இருந்தாலும் அப்பொருளின் உண்மையான இயல்பை அறிவதே மெய்யுணர்வாகும்.



**கே பி வித்யாதரன்**
**அவர்கள்**
**இப்போது**
**இலண்டனில்**


தென் கிழக்கு லண்டனில்
PARTY WORLD U.K
THE BEST DECORATORS
BABAS
Manavarai (Mandaps) and Hall Decorations
Fresh Flower arrangements & Garlands from India
Printed & Plain Balloons for all events
Food Supply & Food warmers
D J Sound Systems, Live Music & Disco Lights
Photographs, Video, Wedding Cards & Hall Bookings
Party Cakes, Gift items & all Party Needs
IN STORE
Fashion Cloths & Jewelleries
Pooja Items & Temple needs
Stationeries & More
T-Shirt Printing & Tailoring
20, Loampit Hill, Lewisham, London SE13 7SW
Tel : 0208 6949404 Mob : 07961843035 Fax : 0208 6949272
Email : sales@babaspartyworld.com
Web : www.babaspartyworld.com


திருச்செந்தூர் கந்த ஷஷ்டி
விசேட யாத்திரை
6 நாளும் தங்கி திரும்பி வர சகல செலவு உட்ப
(7.11.2007 - 17.11.2007)
£ 725
தொடர்புகளுக்கு
London
Euro Travels
&
Tours Ltd
சிறந்த வாகன வசதியும்
சிறந்த தங்குமிடமும்
ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்
Chennai ARS Tours
111-B Loampit Vale
Lewisham London SE13
Tel : 0208 465 9666 Fax : 0208 465 988
தமிழில் தொடர்பு கொள்ள
தி. அருள்தாஸ்


இலண்டனில் தரமான தங்கத்திற்கு
PATHMINI
Jewellers
892 London Road
Thornton Heath
Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999



# AMBAAL JEWELLERS

784 London Road
Thornton Heath
Surrey CR4 6JB
Tel : 020 8689 8293
Fax : 020 8684 0323

176 Upper Tooting Road
London SW17 7ER
Tel : 020 8672 9955
Fax : 020 8672 7097

# VM CASH & CARRY

282, Lee High Road
London
Tel : 020 8852 3561



கலப்படமற்ற தூய தானியவகைகள்,
புதிது குன்றாத கடல் உணவு வகைகள்,
பச்சை நிலையில் பொலிவுறும் இலங்கை,
இந்திய, தாய்லாந்து மரக்கறி வகைகள்,
கார நறுமண உணவுப் பொருட்கள்,
மதுபான வகைகள் வீடியோச் சுருள்கள்,
தமிழர்களின் பாரம்பரிய பண்டிகைகள்
விழாக்களுக்கான பொருட்கள்
அனைத்திற்கும் நாட வேண்டிய இடம்.

வெள்ளிக்கிழமைகளில்
இறக்குமதி செய்யப்பட்ட
மீன் வகைகள் விற்பனையாகின்றன

# HAPPY TEX

6 Ealing Road Wembley
Middx HA0 4TL
Tel : 020 8903 0782
Fax : 020 8903 4680

- Money Transfer
- Textiles
- Watches
- Jewellery
- Rice Cookers
- Perfume
- Wedding Suits



New Mot Station Open !

# CAPITAL AUTOS LTD

51A Milton Avenue East Ham London E6 18G
Tel : 020 8470 4789 Fax : 020 8472 2147 www.capitalauto.com



இலண்டனில்
எந்த இடத்தில்
இருந்தாலும்
உங்கள் வாகனத் திருத்த
வேலைகளுக்கு
நீங்கள் செல்ல
வேண்டிய இடம்

*Accident Repair Centre &*
*General Services &*
*Repairs to all Makes and Models*

- Fully equipped M.O.T. & accident repair centre
- Insurance repairs welcome
- Recovery Service
- Approved insurance repairs
- Courtesy vehicle available For most repairs
- Professional friendly service and advice
- Collection & deliver within the local area

Reg :
Model :
Name :
Tel :

BMW MERCEDES VAUXHALL HONDA
VOLKSWAGEN NISSAN Ford

£ 10 OFF Your M.O.T ! BASED ON CURRENT M.O.T FEE OF £42.10 • OUR VOUCHER PER CAR ONLY

*Hurry - Limited Offer !*

# கடன் தீருமா?

கடுமையான வெயில் நேரம். காலில் செருப்புக் போடாமல் ஒருவன் நடந்து போய்க் கொண்டிருந்தான்.

எதிரே வந்த ஒருவன் ''ஏண்ணே இப்படி...? ஒரு செருப்பு வாங்கிப் போட்டுக்கக்கூடாதா...?'' என்றான்.

உடனே அவன் தன் கையிலே இருந்த ஒரு சாக்குப் பைக்குள் கையை விட்டுப் பிய்ந்து போயிருந்த ஒரு ஜோடி பழைய செருப்பை எடுத்து இவன்கிட்ட காட்டினான்...

''நான் எங்கே போனாலும் செருப்போடேதான் போவேன்... செருப்பில்லாமல் போறது இல்லே. போட்டுக்கிட்டு நடந்தா இது தேய்ஞ்சு போயிடுமேங் கறத்துக்காகப் பத்திரமா பையிலே வச்சி எடுத்துக்கிட்டுப் போறேன்...!''

இது மாதிரி ஆசாமிகளைப் பற்றிக் கிராமங்களில் உள்ள பெரியவர்கள் நிறையக் கதைகள் சொல்வார்கள். அது மாதிரி செருப்பைக் காலில் மாட்டிக் கொண்டு போனால் செருப்பு தேய்ந்து போய்விடும் என்று நினைக்கிற ஓர் ஆசாமி ஒரு நாள் தெரு வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தானாம்.

எதிரே ஒரு பிச்சைக்காரன் வந்திருக்கிறான். ''ஐயா! ஏதாவது தர்மம் பண்ணுங்க...'' என்று கேட்டிருக்கிறான்.

''சில்லறை இல்லே... போ!'' என்று விரட்டி யடிக்கிறான் இவன். அந்தச் சமயத்தில் இவனுடைய சிநேகிதன் ஒருத்தன் அங்கே வந்திருக்கிறான். இவன் விரட்டுவதைப் பார்த்து விட்டு... ''இது மாதிரி விரட்டறது பாவம்... இப்ப இவனுக்கு நான் ஒரு ரூபாய் தருமம் பண்ணப் போறேன்... உனக்கும் ஒரு ரூபாய் கடன் தர்றேன்... அதை என்கிட்டே வாங்கி நீ இவனுக்குப் போடு!'' என்றான்.

நம்ம ஆள் பார்த்தான். வேறு வழியில்லை. அதை வாங்கிப் பிச்சைக்காரன்கிட்டே கொடுத்துவிட்டான்.

அப்புறம் தன்னுடைய நண்பனைப் பார்த்து, ''இப்ப என்கிட்ட சில்லறை இல்லை.... நாளைக்கு வீட்டுக்கு வா தர்றேன்...'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அவனும் இதை விடுவதாக இல்லை. அந்த ஒரு ரூபாயைத் திரும்ப வாங்கிக் கொள்வதற்காக மறுநாள் காலையில் சரியாக சொன்ன நேரத்தில் அவன் வீட்டு வாசல் கதவைத் தட்டினான்.

அவன் திறந்து பார்த்தான்.... ''ஓ... நீயா?'' என்றான்

''ஆமாம் அந்த ஒரு ரூபாய்...?''

''தர்றேன்... 999 ரூபாய் வச்சிருக்கியா?''

''ஏன்?''

''என்கிட்டே 1000 ரூபாய் நோட்டா இருக்கு. நீ 999 ரூபாய் கொடுத்திட்டு 1000 ரூபாயை வாங்கிக்கிட்டுப் போ...!''

இவன் பார்த்தான் சரி.... ஒரு ரூபாயை நாளைக்கு வந்து வாங்கிக் கொள்கிறேன்! என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் போய்விட்டான்.

மறுநாள் வந்தான். இவன் பார்த்தான்.

''இதோ பாருப்பா... இன்னைக்கு உன்கிட்ட கொடுக்கறதுக்காக ஒரு ரூபாயைப் பையிலே போட்டு வச்சிருந்தேன். அதை எலி தூக்கிட்டுப் போயிட்டுது!'' என்றான் இவன்.

மறுநாள் வந்தான். அப்போதும் அவன் ஏதோ பொய்க் காரணம் சொல்லிச் சமாளித்தான். இப்படியே பல நாள்கள்...

தினமும் அவன் வருவான். அவன் ஏதவாது சொல்லுவான். திரும்பி போய்விடுவான். என்றாலும் அந்த ஒரு ரூபாயை எப்படியாவது இவனிடம் வாங்கி விட வேண்டும் என்று தொடர்ந்து முயன்றான். அதற்காக அவன் போக்குவரத்துக்கே நிறையப் பணம் செலவு செய்து விட்டான். இருந்தாலும் ஒரு ரூபாயை வாங்காமல் விடுவதில்லை என்று பிடிவாதமாக இருந்தான்.

இவன் விடாக்கண்டன். அவன் கொடாக்கண்டன்.

ஒரு நாள் விடியற்காலை நேரம். அந்தத் தெருக் கோடியில் கடன் கொடுத்தவன் வந்துக் கொண்டிருந்தான். இவன் அதைப் பார்த்து விட்டான். இன்றைக்கு அவனை எப்படி ஏமாற்றுவது...? மனைவியிடம் யோசனை கேட்டான்.

''நீங்க உயிரோட இருக்கிற வரையில் அந்த ஆள் உங்களை விடப்போறதில்லை.''

''சரி அப்படின்னா ஒண்ணு செய்யலாமா?''

''என்ன?''

''நான் செத்துப் போனது மாதிரி இப்படிக் கீழே விழுந்து கிடக்கிறேன்... நீ அழுதுக்கிட்டிரு. அவன் வந்துப் பார்த்துவிட்டுப் பேசாமலே போயிடுவான்!''

''அப்படியா சொல்றீங்க...?''

''இப்போதைக்கு இதைத் தவிர வேற வழி எதுவும் எனக்குத் தெரியலே...! என்று சொல்லிவிட்டுப் ''பொத்''தென்று கீழே விழுந்து கண்ணை மூடிக் கொண்டான். மனைவியும் அழுகிற மாதிரி நடிக்க ஆரம்பித்தாள். கடன் கொடுத்தவன் வந்து பார்த்தான். அந்த அம்மா சொன்னாள்:

''சாகறப்போகூட... உங்களுக்கு ஒரு ரூபா தரணும்னுதான் சொல்லிக்கிட்டிருந்தார்... திடீர்னு கண்ணை மூடிட்டார்.''

**தென்கச்சி சுவாமிநாதன்**

வந்தவன் விடாக்கண்டன் அல்லவா? இது நடிப்பு என்பதைப் புரிந்து கொண்டான். அப்புறம் சொன்னான்.

''ஒரு ரூபா எனக்குப் பெரிசு இல்லே... அது போனாப் போவுது. செலவோட செலவா... இவன் பிணத்தை எரிக்கிற செலவையும் நானே ஏத்துக்கறேன். என்னாலதானே அவன் உயிரி பிரிஞ்சுது!''

அந்த அம்மாவுக்கு மனசு 'திக்' என்றது!

இவன் என்ன செய்தான் தெரியுமா? ஒரு குடம் பச்சைத் தண்ணீரைக் கொண்டு வந்து கீழே கிடந்தவன் மேலே ஊற்றினான். குளிர் தாங்காமல் அவன் கை இலேசாக ஆடியது!

''பார்த்தீங்களா... செத்ததுக்கு அப்புறமும் எனக்கு அந்த ஒரு ரூபாயைக் கொடுத்திடணும்னு கை துடிக்குது!'' என்றான்.

அப்புறம்... சுடுகாட்டுக்கு கொண்டு போனார்கள். இருட்டி விட்டது.

அங்கே ஒரு பள்ளமான இடத்தில் திருடர்கள் சில பேர் வந்து உங்கார்ந்து தாங்கள் கொள்ளை யடித்த பணத்தை எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

அதை ஓரக்கண்ணால் பார்த்த இவன் பாடையிலிருந்து இலேசாக எழுந்தான்.



அவ்வளவுதான். இதைத் திருடர்கள் கவனித்துவிட்டார்கள்.

''ஐயையோ... பொணம் எழுந் திருக்குது...!'' என்று கத்திக் கொண்டே ஓடி விட்டார்கள்.

அந்தப் 'பொணம்' எழுந்துபோய் அவர்கள் போட்டுவிட்டுப் போன பணத்தின் அருகே அமர்ந்தது!

கீழே சிதறியிருந்த பணத்தையெல்லாம் ஒன்று விடாமல் கவனமாகப் பொறுக்கித் தன் மடியில் கட்டிக் கொண்டது.

இதைப் பார்த்துவிட்டு.... அந்த ஒரு ரூபாய் கடன் கொடுத்தவன் ஓடிவந்தான்.

''இப்பவாவது என் கடனைக் குடுடா!'' என்று கேட்டான் பரிதாபமாக.

அவன் நிமிர்ந்து பார்த்தான்.

''உன் கடனை இப்பவே கொடுத்திடறேன். ஆனா ஒரு கேள்வி...?''

''என்ன?''

''உன்கிட்ட 999 ரூபா இருக்கா?''

---

தமிழ் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் ஆங்கில கவிதை குறுந்தகடு வெளியீடு

*We cordially invite all patriots of Eelam to this special occasion.*

*Dr / Mr & Mrs / Miss.....................................................................*

## Dreams of Freedom

***Distinguished, illustrious Eelam Tamils' Poet, Puthuvai Ratnathurai's***

***CD release in English will be held on Saturday, 3rd of November 2007.***

***At Shri Kanaga Thurkai Amman Temple***

***5 Chapel Road, West Ealing, London W13 9AE from 6.00 pm till 8.30 pm.***

***Lyrics include the following well known titles:***

Oh world! You throttled justice
You burnt our flesh and blood
Who burns and who is being burnt?
Did you know what you were doing to us?

*Your presence will be most appreciated.*

*The poems are a means of achieving our dreams of freedom through the initiation of worldwide discussions.*

*R.S.V.P*
*South Asian group for enpowermernt*
Tel: 07943 065481

# நீரிழிவும் பிரசவ காலமும்



பெண்களின் வாழ்க்கையில் பிரசவகாலம் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதும், மறக்க முடியாததுமான காலகட்டமாகும். ஆனால் அதுவே நீரிழிவு நோயுள்ள பெண்களுக்கு மன உளைச்சல் ஏற்படுத்திவிடக்கூடிய நிகழ்வாக இருக்கின்றது.

நீரிழிவு நோயுள்ள பெண்கள் தங்களால் கருவுற முடியுமா? அப்படியே கருவுற்றாலும் கரு நிலைக்குமா? கருநிலைத்து வளர்ந்தாலும் குழந்தை குறையில்லாமல் பிறக்குமா? என்று பல்வேறு கேள்விகளுக்கு ஆளாகின்றனர். ஆம் இக்கேள்விகள் எல்லாம் ஒரு காலத்தில் உண்மையாகத் தானிருந்தன. ஆனால் இன்சுலின் கண்டுபிடிக்கப் பட்டதற்குப் பின்னால் அர்த்தமற்றவைகளாகவும், பிள்ளைப்பேறு என்பது நீரிழிவு நோயுள்ள பெண்களுக்கும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகவே அமைந்துவிட்டது. ஆனால் அவர்கள் கூடுதல் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது மறுக்க முடியாத, தவிர்க்க முடியாத உண்மையாகும்.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கருத்தரிப்பது, குறைபிரசவத்தில் குழந்தை பேறு, கருச்சிதைவு, குழந்தை இறந்து பிறப்பது என்பன போன்றவை முன்பு 50 விழுக்காட்டளவில் இருந்து இன்றைக்கு இன்சுலின் வருகைக்குப் பிறகு 2 விழுக்காடு என்றளவில் குறைந்துவிட்டது.

எனவே நீரிழிவு உள்ள கர்ப்பிணிப் பெண்கள் பிள்ளைப்பேற்றினை திட்டமிட்டு செய்து கொள்ள வேண்டியது முக்கியமான செயலாகும்.

## எப்படி?

கருத்தரிப்பதற்குமுன்பு நீரிழிவினை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும். அது போன்றே கருவுற்ற பின்பும் சர்க்கரையின் அளவு கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும். கருத்தரிக்கும் காலங்களில் நோய் தொற்று பெரும்பாலும் சிறுநீரகத்தாரையில் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகவே சிறுநீர் பரிசோதனையினை அவசியம் மேற்கொள்ள வேண்டும்.

இரத்தத்தில் சர்க்கரையின் அளவை உணவினாலும் இன்சுலின் ஊசியினாலும் கட்டுப்படுத்துவதைப் போலவே சாப்பிடக்கூடிய மருந்துகளை மருத்துவரின் பரிந்துரையின் படி மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். குழந்தையின் வளர்ச்சியினை ஸ்கேன் செய்து பார்த்து 6 லிருந்து 8 வாரங்களில் ஏதேனும் வளர்ச்சி குறைகள் ஏற்பட்டுள்ளனவா என்பதை அறிந்து அதற்கேற்றாற் போல 8 முதல் 12 வாரங்கள் இரத்தத்தில் சர்க்கரையின் அளவை உணவு கட்டுப்பாட்டுடனும், இன்சுலின் ஊசி எடுத்துக் கொண்டும் மருத்துவரின் ஆலோசனைப்படி குழந்தையின் வளர்ச்சிக் குறைகளை தவிர்க்க வேண்டும்.

பிரசவத்திற்கு முன்பு நீரிழிவு நோய் இல்லாதவர்களில் சிலருக்கு பிரசவ காலங்களில் நீரிழிவு நோய் ஏற்பட வாய்ப்புண்டு. இது பெரும்பாலும் கருவுற்று 20 வாரங்களுக்குப் பிறகு ஏற்படக்கூடியது. இரத்தத்தில் சர்க்கரையின் அளவு 120/140 மி.கி வரை இருக்கும். இவர்களுக்கு 100 கிராம் குளுக்கோஸ் கொடுத்து 1/2 மணிக்கு ஒரு முறை 2 மணி நேரத்தில் 4 முறைகள் பரிசோதித்து சர்க்கரையின் அளவை வெறும் வயிற்றில் 60 முதல் 90 மி.கிராமும் சாப்பிட்டு 2 மணி நேரத்திற்கு பின் 100 முதல் 120 மி.கி என்ற அளவில் தொடர்ந்து சர்க்கரையின் அளவாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பிரசவத்திற்குப் பிறகும் கூட சர்க்கரையின் அளவை கண்காணித்துக் கொள்ள வேண்டியது அவசியம். பெரும்பாலும் பிரசவத்திற்குப் பிறகு இவர்களுக்கு இன்சுலின் தேவை குறைந்து விடும். இவர்களுக்குப் பிரசவத்திற்குப் பின்பும் நீரிழிவு நோய் தொடரக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தி விடாமலிருக்கத் தங்களின் இரத்தக் கொதிப்பையும், சர்க்கரை அளவினையும் அடிக்கடி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இது அடுத்தடுத்த பிரசவங்களின் போது நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அமையும்.

## குழந்தை வளர்ச்சி

கருப்பையில் குழந்தையின் வளர்ச்சியினை, அதனுடைய அசைவுகளை, இதயத் துடிப்பினை கணக்கிட்டு கண்காணிக்க வேண்டும். திடீரென வயிறு அதிக பருமனுடன் இருந்தாலோ எடை கூடி இருந்தாலோ இலட்சியமாக இருந்துவிடக்கூடாது. பொதுவாக நீரிழிவு நோயாளிகள் குழந்தை பருமனாகிவிடும். எனவே அவர்கள் சிசேரியன் அறுவை மூலம் தான் பிரசவிக்க வேண்டும்.

அது மட்டுமல்லாமல் அக்குழந்தைகளுக்கு குறை மாதத்தில் பிறந்ததைப் போல சுவாசத்தில் பிரச்சனை ஏற்படக்கூடும். இக் காரணங்களால் நீரிழிவுள்ள பெண்கள் கருவுற்ற நிலையில் தொடர்ந்து பரிசோதனையினை மேற்கொண்டு மருத்துவரின் அறிவுரையினை தவறாமல் கடைபிடிக்க வேண்டும்.

## மேலும் சில செய்திகள்

நீரிழிவுள்ள பெண்கள் புகைபிடிக்கக் கூடாது. அது குழந்தையின் வளர்ச்சியினை பாதிக்கும். நீரிழிவுள்ள பெண்கள் பிரசவித்த பின் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கலாம். தாய்க்குள்ள நீரிழிவினால் குழந்தைக்குப் பாதிப்பு ஏற்படலாம் என்பது தவறான எண்ணம். எனவே தாய்ப்பால் கொடுப்பதே சிறந்தது.

நீரிழிவுள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளலாமா? பிள்ளை பெற்றுக் கொள்ளலாமா? என்றெல்லாம் பல கேள்விகளை எழுப்புகின்றார்கள். திருமணம் செய்து கொள்ளலாம். பிள்ளை பெற்றுக் கொள்ளலாம். ஆனால் ஆணோ, பெண்ணோ தங்களுக்கு நீரிழிவு நோய் இருப்பதைத் தன்னைத் திருமணம் செய்து கொள்பவரிடம் முறையாக சொல்லி அதற்குரிய பரிசோதனைகளை மேற்கொண்டு பின்விளைவுகளைத் தவிர்க்க வேண்டியது முக்கிய கடமையாகும்.

கருவுற்ற காலங்களில் 75 விழுக்காட்டினர் சரிவரக் கவனித்துக் கொள்ளாததால் தான் குறைப் பிரசவமும், அங்கக்குறைகளுடனும் பிரசவிக்கக்கூடிய நிலை ஏற்படுகின்றது.

நீரிழிவுள்ள பெற்றோர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளில் 10 சதவீதத்தினருக்கு 30 ஆண்டுகளுக்குப் பிறகு தான் நீரிழிவு நோய் ஏற்படுவதாக அறியப்பட்டுள்ளது.

எனவே நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்ச்சியுடன், திட்டமிட்டு, கட்டுப்பாட்டுடன் மருத்துவரின்அறிவுரையினைப் பின்பற்றினால் நலமான குழந்தைப் பேற்றினைப் பெற்று வளமான குடும்ப நலம் பெறலாம்.

## கர்ப்பிணிப் பெண்களுக்கு சில முக்கிய குறிப்புகள்

இரத்தத்தில் சர்க்கரையின் அளவு: தினம் மூன்று வேளையும் பரிசோதனை செய்து கொண்டு இன்சுலின் ஊசியைப் போட்டுக் கொள்ள வேண்டும். சர்க்கரையின் அளவு சரியான நிலைக்கு வந்த பிறகு தினம் ஒருமுறை அதாவது சாப்பிட்டு இரண்டு மணி நேரத்தில் சர்க்கரையின் அளவு 120 மிலி / டெ.லி இருக்குமாறு வைத்துக் கொள்ள வேண்டும். எந்த காரணத்தைக் கொண்டும் ஊசிக்குப் பதிலாக மாத்திரையினை மாற்றக் கூடாது. சிறுநீர்ப் பரிசோதனை செய்து சர்க்கரையின் அளவைப் பார்த்து ஊசிப் போட்டுக் கொள்வது நல்லதல்ல.

சிறுநீரில் கீட்டோன் இருக்கிறதா என்பதை வாரம் ஒரு முறை அல்லது இரண்டு வாரத்திற்கு ஒருமுறை பார்க்க வேண்டும் உடலில் உள்ள கொழுப்புகள் குறைந்து கீட்டோன் வரலாம். அப்படியானால் உங்களுக்கு தேவையான சக்தி உணவில் கிடைக்கவில்லை என்று பொருள். உணவுப் பட்டியலை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

உடல் எடை: சத்தும், அதிக சக்தியுள்ள உணவும் தாயின் வயிற்றில் வளரும் குழந்தைக்கு தேவை. அதிக எடையுள்ள பெண் கருவுற்றால் 7 – 9 கிலோ வரை கூடலாம். அதாவது வாரத்திற்கு 0.2 கிலோ எடை அதிகரிக்கலாம். இந்த எடை அதிகரிப்பு மெதுவாகவும் படிப்படியாகவும் இருக்க வேண்டும். திடீர் என்று அதிக எடை இருந்தால் அவர்களை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியது அவசியம்.

உணவு: உணவுக் கட்டுப்பாடு மிக மிக அவசியம். காய்கறிகள், கீரை தானிய வகைகளை உணவில் சேர்த்து குழந்தை வளர்ச்சிக்குத் தேவையான 200 கி கலோரி நாள் ஒன்றுக்கு என்ற அளவில் உணவைப் பிரித்து சாப்பிட வேண்டும்.

உடற்பயிற்சி: மிதமான உடற்பயிற்சி சர்க்கரையின் அளவைக் குறைப்பதற்கும், குழந்தை வளர்ச்சிக்கும் மிக முக்கியமான செயலாகும். நன்றாக நடப்பது, வீட்டில் சிறுசிறு வேலைகள் செய்வது நல்லது.

தாய்ப்பால்: குழந்தைகளுக்கு சத்துள்ள உணவு தாய்ப்பால், நீரிழிவு நோய் உள்ளவர்கள் தாய்ப்பாலை குழந்தைகளுக்குத் தவறாமல் தரவேண்டும். ●

### தயவுசெய்து கொஞ்சம் சிரிங்க சார்/மாம்

### இலண்டனில் சில தொண்டு நிறுவனங்களின் வரவு செலவு கணக்கு

பொருளாளர்: இந்த வருடம் மொத்தமாக £6200 சேகரித்துள்ளோம். இது கடந்த வருடத்தை விட இரு மடங்காகும். என்பதை பெருமையுடன் தெரிவிக்கின்றேன்.

சபையினர் : கை தட்டுகிறார்கள்.

பொருளாளர் : இன்றைய நிகழ்ச்சிக்கான அரங்கு, ஒலி, ஒளி போன்றவற்றுக்கு செலவு £3000. பழரசம், குடிவகை கொறியல், வறுவல் போன்றவற்றுக்கு £1500, இரவு உணவுக்கு £4500, என மொத்தம் £9000 செலவு செய்துள்ளோம்.

சபையினர் : பலமாக கை தட்டுகிறார்கள்.

பொருளாளர் : வழமை போலவே இந்த வருடமும் ஈழத்தில் வாழும் எம் உறவுகளுக்கு அனுப்புவதற்கு எதுவும் மிச்சமில்லை. ஆனாலும் இம்முறை நாங்கள் கொஞ்சம் வித்தியாசமாக யோசித்து ஈழத்தில் இருக்கும் எமது கிளை நிறுவனம் மூலம் அங்கே அல்லலபடும் மக்களிடம் ஏதாவது சேகரித்து எங்களுக்கு அனுப்ப முடியுமா என கேட்டு கடிதம் எழுதவிருக்கிறோம்.

சபையினர் : மிகவும் பலமாக கைதட்டுகிறார்கள் – சிலர் விசிலடிக்கிறார்கள்

கடிப்பது – பூரான்.

கடந்த நூற்றாண்டின் புகழ்பெற்ற பெண்மணிகளைப் பற்றி ஒரு நிறுவனம் கருத்துக் கணிப்பை நடத்தி வெளியிட்ட போது அதில் முதல் இரண்டு இடங்களைப் பிடித்தவர்கள் சார்லஸ் டயானாவும், மர்லின் மன்றோவும்தான். டயானாவைப் போல் மர்லின் மன்றோ அரச குடும்பத்தைச் சேர்ந்தவரோ சமூக சேவகியோ அல்ல. ஒரு சாதரண குடும்பத்தைச் சேர்ந்தவர்தான். தோளில் ஹேண்ட் பேக்கை மாட்டிக் கொண்டு இன்று நாம் இரயிலிலும் பஸ்ஸிலும் பார்க்கக்கூடிய எத்தனையோ பெண்மணிகளைப் போல சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்.

அவர் நட்சத்திரமாக அமெரிக்கத் திரைவானில் கொடி கட்டிப் பறந்த அந்த நாட்களில் அவரது அழகில் மயங்காதவர்கள் யாரும் இல்லை என்றே கூற வேண்டும். வெறுமனே உடல் கவர்ச்சியைக் கடந்து அவரது

# மர்லின் மன்றோ



சிரிப்பிலும் கண்களில் காணப்படும் இயல்பான குழந்தைத்தனம் நிறைந்த ஒரு அற்புதமான அழகு குடிகொண்டிருந்தது. அவர் நினைத்திருந்தால் தன் வாழ்க்கையை எப்படி வேண்டுமானாலும் அமைத்துக் கொண்டிருக்கலாம். எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்திருக்கலாம். தன்னிகரற்றவராக

அன்றைய தினத்தில் உலகப் பணக்காரர்களில் அவரது அழகில் மயங்காதவர்கள் யாரும் இருந்திருக்க முடியாது. அவரது கடைக்கண் பார்வை தங்கள் மீது திரும்பாதா என ஏங்கியவர்கள் ஆயிரக்கணக்கில் இருந்தனர். அவர்கள் தங்களது கோடிக்கணக்கான சொத்துக்களை மர்லின் மன்றோவின் காலடியில் கொட்டத் தயாராக இருந்தனர். அப்படிப்பட்ட அழகும் அந்தஸ்தும் உலகப்புகழும் பெற்ற மர்லின் மன்றோ திரைப்படங்களில் அழகு தேவதையாக பவனிவந்த அந்த அழகுச் சிலை ஒரு சனிக்கிழமை இரவு தனது அறையில் மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டது. ஆம் அந்த அழகுச் சிலை தன்னையே அழித்துக் கொண்டது. அளவிற்கு அதிகமாக மாத்திரைகளை விழுங்கி தற்கொலை செய்து கொண்டது. அன்றைய தினம் உலக மக்கள் அனைவருக்கும் ஒருவித அதிர்ச்சியாக விடிந்தது.



மர்லின் மன்றோ தன் வாழ்நாள் முழுவதும் ஒருவித முரண்பாடாகத்தான் செயல்பட்டு வந்தார் என்று நாம் செவி வழியாகவும் நூல்வழியாகவும் அறிந்திருப்போம். ஆனால் அவரது வாழ்க்கைப் பாதையில் சில உண்மைகள் ஒளிந்திருக்கின்றன என்பதையும் யாராலும் மறுக்க முடியாது. உலகத்தில் உள்ள எல்லா ஆண்களுக்கும் கனவுக் கன்னியாக விளங்கியவர் மர்லின் மன்றோ என்பது உலகறிந்த உண்மை. இவரது கபடமற்ற தன்மையானது சில சமயங்களில் அவரது கவர்ச்சியையும் தாண்டி, மேலோட்டமாக வெளிப்படும். மர்லின் மற்றோவிற்குப் பிறகு அவர் ஏற்கெனவே நடித்த திரைப்படங்கள் எல்லாம் இன்றும் கூட திரையிலும், தொலைக்காட்சியிலும் நாம் எத்தனை முறை பார்த்தாலும் சலிப்பதில்லை. நடிகை மர்லின் மன்றோவிற்கும் நிஜ வாழ்க்கை மர்லின் மன்றோவிற்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. அவரது வாழ்க்கையை சிறிது புரட்டிப் பார்க்கலாம். முதலில் அவரது பால்யப்பருவ காலத்திற்குச் செல்வோம்.

1926ஆம் ஆண்டு ஜுன் முதல் தேதியன்று பிறந்தார். மன்றோவின் உண்மையான பெயர் நார்மா ஜுன் மார்டென்சன் (Norma Jean Mortensen) ஆகும். இந்தப் பெயர் அவருக்குப் பிடிக்காததாலும் மேலும் சில காரணங்களுக்காவும் தன் பெயரை மர்லின் மன்றோ என மாற்றி வைத்துக் கொண்டார். அதைப் பற்றிய காரணத்தை பிறகு பார்க்கலாம்.

மர்லின் மன்றோ லாஸ் ஏஞ்சலசில் உள்ள தனது தாயார் கிளாடீஸ் – சின் நண்பர்களுடைய வீட்டில்தான் வளர்ந்து வந்தார். ஒவ்வொரு சனிக்கிழமையும் தாயார் கிளாடீஸ் தனது மகளைப் பார்க்க வருவார். மாதத்தில் நான்கு அல்லது ஐந்து நாட்கள் மட்டுமே தாயாருடன் களிப்பார். இருந்தாலும் சிறுவயதிலிருந்தே தனது தாயாருடன் வளரும் வாய்ப்பை அதாவது தாயின் அரவணைப்பை, அந்தப் பாசத்தை மர்லின் மன்றோ பெறவில்லை என்றே கூற வேண்டும். அப்படிப்பட்ட வேதனைகளை மனதில் சுமந்து கொண்டு தனக்கு ஒரு உண்மையான குதூகலமான குடும்பம் இல்லையே என மர்லின் மன்றோ வேதனைப்பட்டதுண்டு. அவர் தனது

குழந்தைப் பருவத்திலிருந்தே ஒரு அன்பிற்கும் பாசத்திற்கும் ஏங்கும் குழந்தையாகவே வளர்ந்து வந்தார். மர்லின் மன்றோவின் பாட்டி அதாவது கிளாடீஸின் தாயார் டல்லா (Dulla) ஒரு மனநிலை பாதிக்கப்பட்டவர். எந்த நேரம் என்ன செய்வார் என்பதை யாராலும் அறிய முடியாது. அவரைப் பார்த்தால் சாதாரணமாக மனநிலை பாதிக்கப்பட்டவர் போல் தெரியாது. நன்றாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பார். திடீரென முரட்டுத் தனமாக வெறி கொண்டவர்போல் மற்றவர்களைத் தாக்க ஆரம்பித்துவிடுவார். ஆனால் சிறிது நேரப் போராட்டத்திற்குப் பிறகு சுயநினைவு திரும்பி தான் என்ன செய்கிறோம் என்பதை உணர்ந்து மனம் வருந்துவதும் உண்டு. எனவே அவரை மருத்துவ மனையில் சேர்த்து சிகிச்சை அளித்து வந்தார்கள்.

ஒருமுறை மர்லின் மன்றோ சிறு குழந்தையாக இருந்த சமயம் இந்த டல்லா தலையணையால் (Pillow) குழந்தை மன்றோவின் முகத்தை மூடிக் கொலை செய்ய முயன்றிருக்கிறார். குழந்தை உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் பொழுது தெய்வாதீனமாக டல்லா பாட்டிக்கே சுயநினைவு திரும்பியதும் தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று புரிந்ததும் தனது பிடியை தளர்த்தி மன்றோவை விடுவித்தார். அவர் உயிர் பிழைத்தது ஒரு மறுபிறவி என்றே கூற வேண்டும். இந்தச் சம்பவத்தை மர்லின் மன்றோவால் சாகும் வரை மறக்க முடியவில்லை.

அதோடு இன்னொரு விஷயமும் உண்டு. அதாவது மர்லின் மன்றோவின் தந்தையும் சிறிது மனநிலை பாதிக்கப்பட்டவர்தான். ஆனால் பாட்டி டல்லாவின் அளவிற்குப் பயப்படும் நிலையில் இல்லை என்று கூறலாம். மேலும் மர்லின் மன்றோவின் தம்பியான மரியான் இவனுக்கும் இதே மாதிரியான வியாதி உண்டு. ஆக குடும்பத்தில் உள்ளவர்கள் பெரும்பாலும் இப்படி மனநிலை பாதிப்பிற் குள்ளானவர்களாகவே இருந்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மர்லின் மன்றோ வளர்ந்து வந்திருக்கிறார் என்பதை நாம் சிறிது எண்ணிப் பார்க்க வேண்டும்.

1933 ஆம் ஆண்டிற்குப் பிறகு மர்லின் மன்றோ தனது தாயார் கிளாடீஸ்ஸுடன் நார்த் ஹாலிவுட் ஹோம் பகுதியில் வசித்து வந்தார். மர்லின் மன்றோவிற்கு இந்தப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கை முறை மிகவும் பிடித்திருந்தது. அந்த மக்களுடன் சந்தோசமாக வசிக்கத் துவங்கினார். அப்படிப்பட்ட சந்தோஷமான வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருப்பது வெகு நாட்கள் நீடிக்கவில்லை. மன்றோவிற்கு மேலும் ஒரு துயரச் சம்பவம் நிகழ்ந்தது. தனது இரத்த சம்மந்தமுள்ள தனது தந்தை, தம்பிமற்றும் பாட்டி போன்றவர்கள் மனநிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கையில், மர்லின் மன்றோவிற்கு மேலும் ஒரு இடி விழுந்ததைப்போல் தன்னை பெற்றெடுத்த தாயான கிளாடீயஸ்ஸும் மனநிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

பள்ளி முடிந்து சந்தோஷமுடன் வீடு திரும்பிய சிறுமி மர்லின் மன்றோவிற்கு இந்தச் செய்தி அறிவிக்கப்பட்டது. சங்கிலித் தொடர் போல் தன் வீட்டிலுள்ள அனைவரும் மனநிலை பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதால் மர்லின் மன்றோ பெரும் பாதிப்பிற்குள்ளானார். அதன்பிறகு வேறு வழியின்றி மர்லின் மன்றோ 1935ல் (Los Angels Orphan Home Society) லாஸ் ஏஞ்சல்ஸ் ஆர்ஃபன் ஹோம் சொசைட்டியில் சேர்க்கப்பட்டார். அந்த நாட்களை மிகவும் கசப்பானதாக கருதினார் மர்லின் மன்றோ. பொதுவாகவே சந்தோஷமான வாழ்க்கை என்பது மர்லின் மன்றோவின் அகராதியில் காணக் கிடைக்காத பொக்கிஷம் என்றே கூறவேண்டும்.

**சினிமா ஆர்வம்:**

நாட்கள் செல்லச் செல்ல தனது தாயார், மற்றுமுள்ளவர்களது நினைவுகளை மறக்க ஆரம்பித்தார் மர்லின் மன்றோ. அப்போதுதான் அவருக்குச் சினிமா மீது ஒரு ஆர்வம் வேர்விடத் துவங்கியது. அதற்கு முக்கியக் காரணம் தான் தங்கியிருந்த அந்த அனாதை விடுதியில் உள்ள குழந்தைகள் யாவரும் ஓய்வு நாட்களில் வழக்கமாக சினிமாவிற்குச் சென்று கண்டு களிப்பார்கள். அவர்களுடன் மர்லின் மன்றோவும் சினிமாவிற்குச் சென்று திரைப்படங்களைப் பார்த்து ரசித்து வந்தார். திரைப்படங்கள் பார்ப்பதால் ஏற்படும் சந்தோஷத்தில் தனது மனவேதனைகளை மறந்து கொண்டிருந்தார்.

மர்லின் மன்றோவின் தாயார் கிளாடியஸ்ஸின் சினேகிதியான கிரேஸ் மெக்கீ (Grace Mekee) என்பவர் மர்லின் மன்றோவிற்கு கார்டியனாக அறிவிக்கப் பட்டார். கிரேஸ்மெக்கீ மற்றும் அவரது கணவர் டாக் கொடார்டு (Doc Goddard) இவர்கள் இருவரும் மர்லின் மன்றோவை லாஸ் ஏஞ்சல்ஸ் ஹோம் சொசைட்டியை விட்டு தங்களுடைய வீட்டிலேயே தங்கிக் கொள்ளுமாறு விரும்பினார்கள். எனவே மர்லின் மன்றோவும் அவர்களது விருப்பப்படி அவர்களது வீட்டில் வந்து தங்கினார். சில மாதங்களுக்குப் பிறகு கொடார்டு தனது அலுவல்களின் நிமித்தம் மேற்கு லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் குடியேற வேண்டியதாகி விட்டது. எனவே லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஒரு அழகிய வீட்டில் அவர்கள் வசிக்கத் துவங்கினார்கள்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

லண்டன் சைவ முன்னேற்ற சங்கத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு விழா அக்டோபர் 6ஆம் தேதி சனிக்கிழமை பல நிகழ்ச்சிகளுடன் நடைபெற இருக்கிறது. விசேட மலர் ஒன்றும் வெளியிட இருக்கிறார்கள்.

*கே. பி. வித்யாதரனின்*

# குருப்பெயர்ச்சி பலன்கள்

எங்கும் எதிலும் முதலிடத்தை பிடிக்கும் நீங்கள், எப்போதும் மற்றவர்களுக்கு சவாலாக விளங்குவீர்கள். தன்மானம் உடைய நீங்கள், யாரையும் சார்ந்து வாழ மாட்டீர்கள். தொலை நோக்குடன் எதையும் செய்து முடிப்பவர்கள்.

இதுவரை உங்களின் ராசிக்கு எட்டாவது வீட்டில் உட்கார்ந்து கொண்டு ஆட்டிப்படைத்த குருபகவான் 16.11.2007 முதல் 30.11.2008 முடிய ஒன்பதாவது வீட்டில் அமர்ந்து உங்கள் வாழ்வில் திடீர் திருப்பங்களையும் செல்வ வளங்களையும் வாரி வழங்க உள்ளார். குடும்பத்தில் இனி மகிழ்ச்சி தங்கும். உங்கள் வார்த்தையை அனைவரும் மதிப்பார்கள். சாப்பிடக்கூட முடியாமல் வேலை, வேலை என்றிருந்தீர்களே, அந்த நிலை மாறும். கணவன் - மனைவிக்குள் நிலவிய சண்டை சச்சரவுகள், சந்தேகங்கள் தீரும். பிரிந்தவர்கள் ஒன்று சேர்வீர்கள். அன்யோன்யம் அதிகரிக்கும். குழந்தை பாக்யம் கிட்டும். கடன்காரர்களைக் கண்டு அஞ்சி ஒதுங்கினீர்களே! பெரிய கடனில் ஒரு பகுதியை இனி பைசல் செய்வீர்கள். ஓடி ஓடி உழைத்தும் ஒன்றுமே ஒட்டாமல் போனதே, இனி நாலுகாசுப்பணம் கையில் தங்கும். நீங்கள் எதைச்சொன்னாலும் எதிர்வாதம் செய்து கொண்டிருந்த பிள்ளைகளின் பிடிவாத குணம் இனி மாறும். உயர்கல்வியில் வெற்றி பெறுவார்கள். உங்கள் மகளுக்கு பலவரன்கள் வந்தும் கல்யாணம் முடியவில்லையே என அவ்வப்போது வருந்தினீர்களே, இனி நல்ல இடத்தில் திருமணம் முடியும். குடும்ப வருமானத்தை உயர்த்த அயராது உழைப்பீர்கள். வீண் அலைச்சலாலும், திடீர்ப் பயணங்களாலும் தூக்கமின்றி தவித்தீர்களே, உடல் உஷ்ணம் அதிகமாகி அடிவயிற்றில் வலி வந்து அவஸ்தைப்பட்டீர்களே, இனி வாடிய முகம் மலரும். நோய் விலகும். குடும்பத்திலும் அமைதியும், மகிழ்ச்சியும் தங்கும். என்னதான் டிப்டாப்பாக உடையணிந்தாலும் ஓட்டை வண்டியை வைத்துக் கொண்டு தானே அவஸ்தைப் பட்டீர்கள்! இனி புதுரக வாகனத்தில் உலா வருவீர்கள். இவ்வளவு காலம் தான் வாடகை வீட்டில் இருந்தாச்சு, இனிமேலாவது நமக்குன்னு சொந்தமாக ஒரு வீட்டை வாங்குவோம் என நினைத்தீர்களே, அந்த எண்ணம் இனி நிறைவேறும். பெற்றோருடன், உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த கருத்து மோதல்கள், மனக் கசப்புகள் நீங்கும். வெளிநாட்டுப் பயணம் நல்ல விதத்தில் அமையும். உங்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு தராமல் ஏமாற்றியவர்களிடமிருந்து பணம் கைக்கு வரும். நீங்கள் ஒன்று சொன்னால் அதை மற்றவர்கள் வேறுவிதமாக எடுத்துக் கொண்டு உங்களை தவறாக புரிந்துக் கொண்டார்களே. அந்த நிலையெல்லாம் மாறும். சந்தர்ப்ப சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல், சமயோஜித புத்தியுடன் இனி செயல்படுவீர்கள்.




வியாபாரத்தில் போட்டியாளர்களுக்கு ஈடுகொடுக்கும் அளவிற்கு பொருளாதார வசதியின்றி தவித்தீர்களே, இனி கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். கடையை விரிவு படுத்துவீர்கள். பழைய பாக்கிகளை அதிரடியாக வசூலிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். புது ஒப்பந்தங்கள் தேடி வரும். அரசால் இருந்த நெருக்கடி நீங்கும். கம்ப்யூட்டர், செல்போன் வகைகளால் லாபம் அதிகரிக்கும். ஏற்றுமதி இறக்குமதி வகைகளாலும் ஆதாயம் வரும்.

உத்யோகத்தில் அதிகாரிகளுடன் மோதல் போக்கு, சக ஊழியர்களிடம் இருந்து வந்த மனக்கசப்புகள் எல்லாம் மாறும். உங்களின் திறமைகள் வெளிப்படும். வெகு நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு எல்லாம் இனி உங்கள் சீட்டைத் தேடி வரும். கணினி துறையிலிருப்பவர்களுக்கு புது சலுகைகள் கிடைக்கும். நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். அயல்நாட்டு வாய்ப்புகளும் வரும்.

இந்த குரு மாற்றம் பணம், பதவி, புகழ் என பலவற்றையும் தருவதுடன் சாதனைமேல் சாதனையும் புரிய வைக்கும்.

உங்களது ராசிக்கு 7ஆவது வீட்டில் நின்ற அட்டமாதிபதியான குரு பகவான், 16.11.2007 முதல் 30.11.2008 வரை 8ஆவது வீட்டில் அமர்ந்து ஆளப் போகிறார்.

குரு 8-ல் மறைவதால், கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த ஈகோ பிரச்னை தீரும். மனம் விட்டுப் பேசி மகிழ்வீர்கள். தாம்பத்தியம் இனிக்கும்.

'குரு எட்டாவது வீட்டுக்கு வருகிறாரே... சஷ்டாஷ்டக தோஷமாச்சே... சகட யோகத்தில் வருபவர் உருட்டித் தள்ளி விடுவாரே!' என சங்கடப்படாதீர்கள்.

உங்களது ராசி நாதனின் பகைக்கோளான குரு, 8-ல் மறைவதால் நல்லதே நடக்கும். வர வேண்டிய பணம் வந்து சேரும். மற்றவர்களிடம் ஏமாந்த நிலை மாறும். முதுகுக்குப் பின்னால் உங்களை அவமதித்த உறவினர்களும் நண்பர்களும் உங்களின் தயாள மனசைப் புரிந்து கொள்வர்.




பிள்ளைகளை அவர்களின் போக்கில் விட்டுப் பிடிப்பது நல்லது. மகனால் கொஞ்சம் அலைச்சலும், வீண் செலவுகளும் வரும். மகளுக்கு நல்லது நடக்கும். பிள்ளைகளது நட்பு வட்டத்தைக் கண்காணியுங்கள்; பாதை மாறாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

யாருக்காகவும் ஜாமீன், கியாரெண்டர் கையெழுத்து இட வேண்டாம். பணம் கொடுக்கல் - வாங்கலில் கவனமாக இருங்கள். சொத்து வாங்கும்போது, சம்பந்தப்பட்ட ஆவணங்களை வழக்கறிஞர் மூலம் சரி பாருங்கள். நள்ளிரவு மற்றும் அதி காலைப் பயணங்களைத் தவிருங்கள். சில சிறு விபத்துகள் வரலாம். உடன் பிறந்தவர்கள் இடையே இருந்த மோதல் போக்கு விலகும்.

பூர்வீகச் சொத்துப் பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். சகோதரி வீட்டுத் திருமணத்தை முன்னின்று நடத்துவீர்கள்.

அரசாங்க வேலைகள் துரிதமாக முடிவடையும். வருமான வரி, சொத்து வரி ஆகியவற்றை முறைப்படி செலுத்துங்கள். அரசியலில் செல்வாக்கு கூடும். பங்குச் சந்தை மூலம் பணம் சம்பாதிப்பீர்கள். வெளி வட்டாரத்தில் மதிப்பு கூடும். மற்றவர்களை விமர்சிக்க வேண்டாம். உங்களை அவதூறாகப் பேசுபவர்களை பொருட்படுத்த வேண்டாம். கௌரவப் பதவிகள் தேடி வரும். வயிற்று வலி, நெஞ்சு வலி ஆகியன நீங்கும்.

வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். போட்டிகள் அதிகமாகும். வேலையாட்கள் ஒத்துழைப்பர். புது வேலையாட்களை பணியில் அமர்த்துவீர்கள். வியாபார ரகசியங்களை வெளியில் விவாதிக்க வேண்டாம். பழைய பாக்கிகளை வசூலிப்பீர்கள்.

பங்குதாரர்களுடன் விவாதிக்காமல், ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளுங்கள். வெளிநாட்டில் இருப்பவர்கள் மூலம் புது ஒப்பந்தங்கள் தேடி வரும். உணவு, இரும்பு மற்றும் நீசப் பொருட்களால் லாபம் அதிகரிக்கும்.

ஒரே நேரத்தில் பல வேலைகளைப் பார்க்க வேண்டி இருக்கும். நேரம் காலம் பார்க்காமல் உழைத்ததற்கு பலனாக உயர் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். உங்களது ஆலோசனைகள் ஏற்கப்படும். வெளிநாட்டுத் தொடர்புள்ள நிறுவனங்களில் அதிக சம்பளத்துடன் வேலை கிடைக்கும். ஒப்பந்தப் பத்திரங்களில் கையெழுத்திடாமல் இருப்பது நல்லது.

மாணவர்கள் தினந்தோறும் படிப்பது நல்லது. விடைகளை எழுதிப் பாருங்கள். கலைஞர்கள் எதிர்பார்த்த நல்ல வாய்ப்புகள் தேடி வரும். படைப்புத் திறன் அதிகரிக்கும். மேடைகளில் கௌரவிக்கப்படுவீர்கள்.

இந்த குருப் பெயர்ச்சி, அரை குறையாக நின்ற வேலைகளை முடிக்க வைக்கும். செலவுகள் ஏற்பட்டாலும் வெளி வட்டாரத் தொடர்புகள் விரிவடையும்.

**கொ**ள்கையை விட்டுக்கொடுக்காத நீங்கள், மற்றவர்களின் சுதந்திரத்தில் ஒருபோதும் தலையிடமாட்டீர்கள். என்றும் நியாயத்தின் பக்கம் நின்று கொண்டு அதர்மத்தை எதிர்த்துப் போராடுவீர்கள். வாக்குறுதி தந்துவிட்டால் அதை நிறைவேற்றும் வரை ஓயமாட்டீர்கள்.

இதுவரை உங்களின் ராசிக்கு ஆறாவது வீட்டில் அமர்ந்து கொண்டு அலைகழித்த குருபகவான் சமசப்தம ராசியான ஏழாம் ராசிக்குள் தற்சமயம் அடிஎடுத்து வைக்கிறார். உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் சிக்கினீர்களே, எப்போதும் எதையோ இழந்தது போல கவலைதோய்ந்த முகத்துடன் காணப்பட்டீர்களே, அங்கும் இங்கும் கடன் வாங்கி எதையும் திருப்பித்தர முடியாமல் திணறினீர்களே, இனி இந்த அவலநிலை யாவும் மாறும். அடுத்தடுத்து வேலைப்பளு அதிகரித்துக் கொண்டே இருந்து உங்களை பல வழிகளிலும் தொல்லை கொடுத்ததே, நண்பர்கள் உறவினர்களிடத்தெல்லாம் எதற்கெடுத்தாலும் கோபப்பட்டீர்களே! நிரந்தரமாக எதிலும் வருமானம் கிடைக்காமல் தத்தளித்தீர்களே! அந்த நிலையும் இனி மாறும். குரு உங்கள் ராசியை பார்ப்பதால் தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். நிரந்தர வருமானத்திற்கு ஏற்பாடு செய்வீர்கள். குடும்பத்தில் அமைதி உண்டாகும். கணவன் - மனைவிக்குள் இனி ஒற்றுமை ஓங்கும். பழைய கடனை பைசல் செய்ய, எதிர்பார்த்த வகையில் உதவிகள் கிடைக்கும். சோர்ந்திருந்த நீங்கள் இனி உற்சாகமடைவீர்கள். அடகிலிருந்த நகைகளை மீட்பீர்கள். சுருங்கிய முகம் மலரும். பேச்சில் இளமை பொங்கும். உங்களின் தோற்றப்பொலிவை அதிகப்படுத்த முற்படுவீர்கள்.




பிள்ளைகளின் திறமைகளை வெளிக்கொண்டு வர புது முயற்சிகளை எடுப்பீர்கள். குழந்தை பாக்யம் உண்டாகும். உங்கள் மகளுக்கு திருமணம் முடியும். மகனுக்கு எதிர்பார்த்தபடி வெளிநாடு சென்று படிக்கும் வாய்ப்பு கிட்டும். உங்களை எதிரியாக நினைத்த பலர், இனி உங்களின் நல்ல மனசைப் புரிந்து கொண்டு நட்பு பாராட்டுவார்கள். நண்பர்கள், உறவினர்கள் உதவியுடன் புதுத்தொழில் தொடங்குவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்களின் கல்யாணச் சடங்குகளை முன்னின்று நடத்துவீர்கள். நாடாளுபவர்களின் நட்பு கிடைக்கும். அரசியல் தலைவர்களால் பாராட்டப்படுவீர்கள். அயல்நாட்டுப் பயணங்கள் உண்டு. மனதிற்குப் பிடித்த வேலைக்காக தேடி அலைந்தீர்களே, இனி எதிர்பார்த்த வகையில் நல்ல வேலை கிடைக்கும். வழக்கில் இருந்துவந்த இழுபறி நிலை மாறும். தொலைதூர புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். கவிதை, கட்டுரை, இலக்கியம், இசையில் ஆர்வம் பிறக்கும். சமூக சேவையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வீர்கள்.

வியாபாரத்தில் எதைச்செய்தாலும் அது எதிர்மறையாகவே போய்விடுகிறதே, என அவ்வப்போது வருந்தீர்களே, இனி உங்களின் ஒவ்வொரு முடிவும் அதிரடியாக இருக்கும். நவீன விளம்பர யுக்தியை பயன்படுத்தி போட்டியாளர்களை பின்வாங்கச் செய்வீர்கள். பங்குதாரர்களிடம் தினந்தோறும் போராட்டமாக இருந்து வந்ததே! ரகசியங்களையெல்லாம் வேலையாட்கள் வெளியில் சொல்லிக் கொண்டிருந்தார்களே! இந்த நிலை மாறும். இனி உங்களை அனுசரித்து போவார்கள். கம்ப்யூட்டர், மருந்து, ரசாயனம், உணவு வகைகளால் லாபம் அதிகரிக்கும். வாடகை இடத்தில் இயங்கி வந்த கடையைச் சொந்த இடத்துக்கு மாற்றுவீர்கள். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

உத்யோகத்தில் நேரம் பார்க்காமல் உழைத்தும், அதற்கான பலன் இல்லையே என்று நெருக்கமானவர்களிடம் புலம்பித்தவித்தீர்களே! இனி கவலை வேண்டாம். பதவி உயர்வுடன் சம்பள உயர்வும் உண்டு. சக ஊழியர்களிடையே வீண் வாக்குவாதங்கள் சதா வந்துகொண்டே இருந்ததே, இனி தங்களின் தவறை உணர்ந்து நட்புறவாடுவார்கள். புது சலுகைகள் கிடைக்கும். அயல்நாட்டு வாய்ப்புகளும் உண்டு.

உங்களது ராசிக்கு பூர்வ புண்ணிய வீட்டில் நின்ற குரு பகவான், 6ஆவது வீட்டில் அமர்வதால், அநாவசியச் செலவுகளைக் குறைப்பது நல்லது. யோசிக்காமல் எதிலும் கையெழுத்து இடாதீர்கள். அடுத்தவர்களது விஷயத்தில் தலையிட வேண்டாம். கணவன் - மனைவிக்குள் சிறுசிறு சண்டைகள் வந்து நீங்கும். முன்கோபத்தால் ஆத்திரப்பட்டு பின்னர் வருந்தும் நிலையை மாற்றிக் கொள்ளுங்கள்.

குரு பகவான் உங்களது ராசிக்கு பாக்யாதிபதியாகவும் இருப்பதால், கெடு பலன்களது கடுமை குறையும்.

உயர் கல்வி மற்றும் உத்தியோகத்தின் பொருட்டு பிள்ளைகளைப் பிரிய நேரும். அவர்களது வருங்காலத்துக்காக அதிகம் உழைக்க வேண்டியிருக்கும். குரு பகவான், தன ஸ்தானத்தைப் பார்ப்பதால், கேட்ட இடத்தில் பணமும் தக்க நேரத்தில் பிரபலங்களது உதவியும் கிடைக்கும்.




பசி இன்மை, தூக்கம் இன்மை, கை - கால் வலி ஆகியன வந்து விலகும். எளிய உடற் பயிற்சிகள் செய்யுங்கள். எண்ணெய் கலந்த உணவுகளைக் குறைத்துக் கொண்டு காய் - கனிகளை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கோயில் திருவிழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். சில பதவிகள் வலிய வந்தடையும். அந்தரங்க விஷயங்களை வெளியில் பேச வேண்டாம். பழைய நண்பர்களை கொஞ்சம் விட்டுப் பிடியுங்கள்; தாமாகத் தேடி வருவார்கள். உங்களது வளர்ச்சி கண்டு உறவினர்கள் வியப்படைவார்கள். சகோதரி உதவுவார்; சகோதரரிடம் கொஞ்சம் மனத்தாங்கல் வந்து நீங்கும்.

திடீர்ப் பயணங்கள் அதிகரிக்கும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். புது வீடு வாங்குவீர்கள். வங்கியிலிருந்து எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். முக்கியமான முடிவுகள் சிலவற்றை தைரியமாக எடுப்பீர்கள். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். அரசு தொடர்பான விஷயங்களில் எச்சரிக்கை தேவை. வழக்குகளில் அலட்சியம் வேண்டாம்.

வியாபாரத்தில் ஆர்வம் பிறக்கும். பழைய பாக்கிகளை வசூலிப்பீர்கள். முக்கியமான, பெரிய ஆர்டர்களைப் பிடிப்பீர்கள். காண்ட்ராக்ட் துறையில் இருப்பவர்களுக்கு, கைவிட்டுப் போன ஒப்பந்தங்கள் திரும்பக் கிடைக்கும். ரியல் எஸ்டேட் லாபம் தரும். வேலையாட்கள் பொறுப்பாக நடப்பர். பங்குதாரர்கள் உங்களை ஏமாற்ற வாய்ப்பு உண்டு. எனவே, ஆவணங்களில் கையெழுத்திடுமுன் சட்ட ஆலோசகர்களைச் சந்தியுங்கள்.

உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் ஏற்படும். அதிகாரிகள் பற்றிய ரகசியங்களை வெளியில் விவாதிக்காதீர்கள். சக ஊழியர்களால் பாராட்டப்படுவீர்கள். வேலைச் சுமை அதிகரிக்கும். புது வாய்ப்புகள் வரும்; யோசித்து ஏற்கவும். வெளிநாட்டுத் தொடர்புள்ள நிறுவனங்கள் மூலம் பயனடைவீர்கள். உயரதிகாரிகளுடன் பனிப்போர் ஏற்படலாம்.

மாணவ - மாணவியர் விடைகளை எழுதிப் பார்த்துப் படிப்பது நல்லது. மறதி, மந்தம் வந்து செல்லும். தவறு களைச் சுட்டிக் காட்டும் ஆசிரியர்கள் மீது வருத்தம் வேண்டாம். கெட்ட நண்பர்களைத் தவிருங்கள். கிசுகிசுத் தொல்லைகள் கலைஞர் களைத் தேடி வரும். எச்சரிக்கை தேவை. புது வாய்ப்புகள் கிடைக்கும். வாக்குறுதிகளை போராடி நிறைவேற்றுவீர்கள்.

இந்தக் குருப் பெயர்ச்சி, புது அனுபவங்களையும், அலைச்சலுடன் கூடிய ஆதாயத்தையும் தருவதாக அமையும்.



## சிம்மம்

முன் வைத்த காலைப் பின் வைக்காத நீங்கள், சொன்ன சொல் தவறமாட்டீர்கள். மனதிற்குப் பிடித்துவிட்டால் கணக்குவழக்கு பார்க்காமல் வாரி வழங்குவீர்கள். சட்டதிட்டம் பேசும் நீங்கள், சாமான்ய மக்களைவிட சாதாரண மக்களுக்கு அதிகம் உதவுவீர்கள். எந்த ஒரு விஷயத்திலும் தெள்ளத்தெளிவான முடிவுகளை எடுக்க முடியாமல் ஒருவித தயக்கத்துடன் இருந்தீர்களே! இனி அந்த அவலநிலை மாறும். மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்குமளவிற்கு அனுபவ அறிவு கிடைக்கும். எப்போதும் உடம்பில் ஏதாவது ஒரு பிரச்சனை வந்துகொண்டே இருந்தே, இனி நோய் தீரும். உடல் ஆரோக்யம் சீராகும். மருந்து, மாத்திரை அளவு குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். சொந்தம் பந்தங்களால் கணவன் - மனைவி உறவில் பெரிய பூகம்பமே வெடித்ததே! இனி அன்யோன்யம் அதிகரிக்கும். கோவில் கோவிலாய் அலைந்து, விரதங்களும் இருந்தீர்களே, உங்கள் விருப்பபடியே அழகான அறிவான குழந்தைபாக்யம் கிட்டும். பிள்ளைகள் மீது இருந்த வெறுப்புணர்வு நீங்கும். பிள்ளைகளும் குடும்ப சூழ்நிலையறிந்து பொறுப்பாக நடந்து கொள்வார்கள். மகனுக்கு நல்ல மணப்பெண் அமையும். உங்கள் மகளுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். வெளியூர் பயணங்களால் வீண் செலவுகள் அதிகரித்துக் கொண்டே போனதே, அந்த நிலையெல்லாம் மாறும்.

வெளி வட்டாரத்தில் உங்களை பார்த்த உடனேயே முகத்தைத் திருப்பிக் கொண்டவர்களெல்லாம் இனி வலிய வந்து பேசுவார்கள். உங்களை மதித்து சில ஆலோசனைகள் கேட்பார்கள். பெரிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப் படுவீர்கள். உடன்பிறந்தவர்கள் கூட நம்மை புரிந்துகொள்ளவில்லையே, என அவ்வப்போது ஆதங்கப்பட்டீர்களே, அந்த நிலையெல்லாம் மாறும். உங்களின் உண்மையான பாசத்தை புரிந்துக் கொள்வார்கள். தாயாருடன் எப்போது பார்த்தாலும் சண்டை சச்சரவு நிலவியதே, எவ்வளவோ செலவு செய்தும் தாயாரின் அன்பை பெற முடியாமல் தவித்தீர்களே, இனி அம்மாவின் ஆசியைப் பெறுவீர்கள். தாய்வழி சொத்திலிருந்து வந்த வில்லங்கம் விலகும். அரசியலில் ஓரங்கட்டப்பட்டீர்களே, இனி மேடையில் தலைவருக்கு பக்கத்தில் அமருவீர்கள். ஆன்மீகத்தில நாட்டம் அதிகரிக்கும். குலதெவப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். திருவிழாவை தலைமை தாங்கி நடத்துவீர்கள். முன்கோபத்தால் சிலரின் நட்பை இழந்தீர்களே, இனி கனிவான பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். மனைவி நீண்டநாட்களாக கேட்டுக்கொண்டிருந்த நகை, பட்டுப்புடவை வாங்கித் தருவீர்கள். சொந்த ஊரில் செல்வாக்கு கூடும். பூர்வீகச் சொத்தை சீர்திருத்தம் செய்வீர்கள். உங்களைச் சுற்றி இருப்பவர்களில் நல்லவர்கள், அல்லாதவர்கள் யாரென்பதை உடனே புரிந்து கொள்வீர்கள். அயல் நாட்டிற்குச் சென்று வருவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாருடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். அவர்களின் சுபகாரியங்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள்.

வியாபாரத்தில் பலவகையில் அடிபட்டு வந்ததால் இப்போது உஷாராக முதலீடு செய்வீர்கள். வேலையாட்களின் போக்கை உணர்ந்து, அதற்கேற்ப அவர்களிடம் வேலை வாங்குவீர்கள். பங்குதாரர்களால் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும். புதிய பங்குதாரர்கள் அறிமுகமாவார்கள். உணவு, இரும்பு, ரியல் எஸ்டேட் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி வகைகளாலும் ஆதாயம் அடைவீர்கள். அரசாங்க கெடுபிடிகள் குறையும்.

உத்யோகத்தில் தூக்கி எறியப்பட்டீர்களே, சக ஊழியர்கள் நன்றி மறந்து உங்களுக்கு எதிராகப் பேசினார்களே, அந்த இழிநிலையெல்லாம் இனி மாறும். உங்களைப் பற்றி தவறாகப் பேசியவர்களெல்லாம் உங்களின் நல்ல மனசைப் புரிந்து கொள்வார்கள். சம்பளம் உயரும். கணினி துறையிலிருப்பவர்களுக்கு திடீர் யோகம் உண்டு.

ஆகமொத்தம் இந்த குரு மாற்றம் ஒடுங்கி ஓரமாக நின்றுகொண்டிருந்த உங்களை, கோபுரத்தில் உட்காரவைப்பதுடன், பணபலத்தையும், மனமகிழ்ச்சியையும் தருவதாக அமையும்.



## கன்னி

அடுக்கடுக்காக சோகங்கள் வந்தாலும் சோர்ந்துவிடாமல் தன்னைத்தானே தேற்றிக் கொண்டு வெளியில் புன்னகையுடன் பேசுபவர்களே! அறிஞர்கள், பெரியவர்களைக் கண்டால் அடிபணிந்து வணங்குபவர்களே!


இதுவரை உங்கள் ராசிக்கு மூன்றாவது வீட்டில் உட்கார்ந்து கொண்டு உங்களை முடக்கிப் போட்ட குருபகவான், 16.11.2007 முதல 30.11.2008 முடிய நான்காவது வீட்டில் அமர்ந்து உங்களை வழிநடத்துவார். வாடிய முகத்துடன் காணப்பட்ட நீங்கள், இனி மலர்ந்த முகத்துடன் சுறுசுறுப்பாகக் காணப்படுவீர்கள். மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகளை எடுத்து பல முறை அவதிப்பட்டீர்களே, இனி சுயமாக யோசிப்பதுடன் அதிரடிமுடிவுகள் எடுத்து அருகிலுள்ளவர்களை ஆச்சர்யப்படுத்துவீர்கள். குடும்பத்தில் அமைதி தங்கும். என்றாலும் கணவன் - மனைவிக்குள் வீண் விவாதங்களும், ஈகோப் பிரச்னைகளும் அவ்வப்போது வந்துபோகும். வருவாய் ஒருபுறம் இருந்தாலும் செலவினங்களும் அடுக்கடுக்காய் வரும். அனாவசியச் செலவுகளைக் குறைத்து விட்டு அத்தியாவசிய செலவுகளை மட்டும் செய்யப்பாருங்கள். பிள்ளைகளால் இருந்துவந்த வீண் அலைச்சல்கள் குறையும். உடன் பிறந்தவர்களிடையே இருந்து வந்த மனக் கசப்புகள் நீங்கும். தாயாரின் உடல்நிலை பாதிக்கும். மனைவிக்கும் மருத்துவச் செலவுகள் உண்டு. பெற்றோர் சில நேரம் ஆவேசமாகப் பேசினாலும் அதிர்ச்சி அடைய வேண்டாம். ஆடை ஆபரணங்கள் சேரும்.

வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வி.ஐ.பிகளின் உதவி கிட்டும். எந்த ஒரு முடிவையும் பலமுறை யோசித்துச் செயல்படுத்தப் பாருங்கள். நீங்கள் மற்றவர்களுக்கு எவ்வளவு நல்லது செய்தாலும், அதனை மறந்துவிட்டு உங்களிடம் சண்டையிடுவார்கள். குலதெய்வ கோவிலுக்கு சென்று வாருங்கள். பிரார்த்தனைகளையும் தள்ளிப்போடாமல் நிறைவேற்றுங்கள். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். அரசியல்வாதிகள் மற்றவர்களைத் தாக்கி பேச வேண்டாம். கிடைக்கின்ற நேரங்களில் தியானம், யோகாசனம் செய்யப் பாருங்கள். புது நண்பர்களிடம் அளவாகப் பழகுங்கள். வாகனத்தை இயக்கும் போது கவனத்தைச் சிதறவிடாதீர்கள். தொலைபேசியில் பேசிக்கொண்டே சாலைவிதிகளை மீறி வாகனத்தை செலுத்த வேண்டாம். சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். நண்பர்கள், உறவினர்களில் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். அவர்களிடம் நிலைமையைத் தெளிவாக எடுத்துச் சொல்வது நல்லது. பெரிய பொறுப்புகள் தேடி வரும். வெளி நாட்டுப் பயணங்களும் வந்து சேரும். அரசு அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். வழக்கு சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு சுமுகமான தீர்வு கிட்டும்.

வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகள் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் கொஞ்சம் கவனமாக இருங்கள். அவர் சொல்கிறார், இவர் சொல்கிறார் என்று அதிரடியாக பெரிய முதலீடுகளை போட்டு மாட்டிக் கொள்ளாதீர்கள். இருப்பதை வைத்து சமாளிக்க கற்றுக்கொள்ளுங்கள். வேலையாட்களிடம் தொழில் சம்பந்தப்பட்ட ரகசியங்களை சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். பங்குதாரர்களால் அவ்வப்போது பிரச்சனைகள் மூளும். அனுசரித்துப் போகப் பாருங்கள். வாடிக்கையாளர்களைக் கவர அதிரடிச் சலுகைகளை அறிமுகப் படுத்துவீர்கள். இரும்பு, மூலிகை, உணவு, கெமிக்கல் வகைகளால் ஆதாயம் உண்டு. நம்பிக்கைக்குரியவர்களிடம் கலந்தாலோசித்து சில முடிவுகளை எடுக்கப் பாருங்கள்.

உத்யோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். மேலதிகாரியைப் பற்றி குறை கூறுவதைத் தவிர்த்துவிட்டு தேங்கிக் கிடக்கும் பணிகளை விரைந்து முடிக்கப் பாருங்கள். பழைய சம்பளப் பாக்கிகளும் வந்து சேரும். அயல்நாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து புதிய வேலைகள் வந்து அமையும். சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் மூக்கை நுழைக்காதீர்கள்.

இந்த குரு மாற்றம் தன்னம்பிக்கையை தருவதாகவும், பிரச்சனைகளை சந்தித்து, வெற்றி பெறும் மனப்பக்குவத்தையும் தருவதாக அமையும்.




உங்களது தன வீட்டில் நிற்கும் குரு பகவான், 16.11.2007 முதல் 30.11.2008 வரை 3ஆவது வீட்டில் அமரப் போகிறார். இதுவரை உங்களுக்கு பண வரவு மற்றும் குடும்ப மகிழ்ச்சியையும் வழங்கினார். இவர், 3ஆவது வீட்டுக்கு வருவதால், நல்லதே நடக்கும். குரு, உங்கள் மனைவியின் ஸ்தானம், பாக்கிய ஸ்தானம், லாப ஸ்தானம் ஆகியவற்றை கருணையுடன் பார்ப்பதால் வெற்றிகள் தொடரும்.

தெளிவாக, தீர்க்கமாகப் பேசுவீர்கள். அக்கம் பக்கத்தவர்களை அனுசரிப்பீர்கள். குடும்பத்தில் அமைதி தவழும். உறவினர் மற்றும் நண்பர்களால் கணவன் - மனைவிக்குள் அவ்வப்போது வாக்குவாதங்கள் எழும். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். தாயாருடன் கருத்து வேறுபாடுகள் வரும். சொத்து விவகாரத்தில் கவனம் தேவை.

முக்கியமான சான்றிதழ்களில் கையெழுத்து இடுவதற்கு முன்பு ஆலோசிப்பது நல்லது. பிரபலங்களது நட்பு கிட்டும். முன் பின் அறியாதவர்களை அவர்களிடம் அனுப்ப வேண்டாம். வாகனத்தைக் கையாளும் போது எச்சரிக்கை தேவை. பிள்ளைகள் பாசமாக இருப்பார்கள். அவர்களின் உடல் நலம் சீராகும். வேலை கிடைத்து சம்பாதிக்கத் தொடங்குவார்கள். வெளிநாட்டுக்குச் சென்று படிக்கும் வாய்ப்பும் அவர்களுக்கு அமையும். இனிமேல் அவ்வப்போது கொஞ்சம் இளைப்பாற உங்களுக்கு நேரம் கிடைக்கும்.

விலையுயர்ந்த ஆபரணங்கள் மற்றும் பொருட்களை எச்சரிக்கையுடன் கையாளுங்கள். மின்னணு, மின்சார சாதனங்களுக்குப் பழுது ஏற்படலாம். பிறரது அந்தரங்க விஷயங்களில் தலையிடவோ குடும்ப விஷயங்களை வெளியாரிடம் விவாதிக்கவோ வேண்டாம். பதவிகள் தேடி வரும். சவாலான, பிரச்னைக்கு உரிய பதவிகளைத் தவிருங்கள்.

புத்திசாலித்தனமும் ஆளுமைத் திறனும் அதிகரிக்கும். கண் வலி மற்றும் நெஞ்சு எரிச்சல் ஆகியன விலகும். பித்த சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படலாம். கனவுத்தொல்லை மற்றும் தூக்கம் இன்மை ஆகியவற்றால் சோர்வாகக் காணப்படுவீர்கள்.

வியாபாரம் சூடு பிடிக்கும். பற்று - வரவு உயரும். போட்டிகள் அதிகரிக்கும். வேலையாட்களால் சிறு பிரச்னைகள் ஏற்படலாம். தொழில் ரகசியங்களை பிறரிடம் விவாதிக்க வேண்டாம். கடனுதவி கிடைக்கும். கடையை விரிவுபடுத்துவீர்கள். புதிய பங்குதாரர்களிடம் எச்சரிக்கை தேவை. கூடுமானவரை கூட்டுத் தொழிலைத் தவிர்ப்பது நல்லது. புரோக்கரேஜ், கம்ப்யூட்டர், உணவு வகைகள் மற்றும் வாகனத்தால் லாபம் கிடைக்கும்.

உத்தியோகத்தில் அதிகாரிகள் ஒத்துழைப்பர். சக ஊழியர்களால் சிறு பிரச்னைகள் வந்து போகும். வேலைச்சுமை அதிகரிக்கும். மூத்த அதிகாரிகளுடன் உரையாடும்போது நிதானம் தேவை. திடீர் இடமாற்றம் வரும். சில அடிப்படை உரிமைகளுக்காகப் போராட வேண்டி வரும். பதவி உயர்வுக்கு முயல்வீர்கள். புது உத்தியோக வாய்ப்புகள் தேடி வரும். குடும்பத்தைப் பிரிந்து வெளியூரில் பணிபுரிய வேண்டி வரும்.

மாணவ - மாணவியரது அறிவுத் திறன் மற்றும் கேள்வி கேட்கும் ஆற்றல் கூடும். உயர்கல்வியில் கவனம் செலுத்துங்கள். சக மாணவர்கள் உதவுவர். விளையாட்டில் பரிசும் பாராட்டும் கிடைக்கும். கலைஞர்களுக்கு பழைய நிறுவனங்களில் இருந்து புது வாய்ப்புகள் தேடி வரும்.

இந்தக் குருப் பெயர்ச்சி, உங்களுக்குச் செலவுகளையும், காரிய தாமதத்தையும் தந்தாலும், மறு புறம் வளர்ச்சியையும், செல்வாக்கையும் தரும்.

**வா**ய்மையே வெல்லும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கையுடைய நீங்கள், நாட்டு நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். உலக விஷயங்களை உன்னிப்பாகக் கவனிக்கும் நீங்கள், எப்போதும் தொலை நோக்குச் சிந்தனை உள்ளவர்கள்.

இதுவரை உங்கள் ராசிக்குள்ளேயே உட்கார்ந்து கொண்டு உங்களை பித்தனாய், பேயனாய் ஆட்டிப்படைத்து விரக்தியின் விளிம்பிற்கே அழைத்துச் சென்ற குருபகவான் இப்போது உங்கள் ராசியை விட்டு விலகுகிறார். தட்டில் சோறு இருந்தும் நிம்மதியாக சாப்பிட முடியவில்லையே! உங்களுக்குள்ளேயே ஒரு மிருகம் உட்கார்ந்து உலுக்குவதுபோல உணர்ந்தீர்களே! எந்த வேலையை ஆரம்பித்தாலும் முடியாமல் அரைகுறையாக நின்றுபோனதே! எவ்வளவோ படித்திருந்தும், அனுபவ அறிவு இருந்தும், சின்னச் சின்ன பிரச்சனை களைக் கண்டு பயந்தீர்களே! உங்கள் மீதே உங்களுக்கு நம்பிக்கையில்லாமல் போனதே! இனி இந்த நிலையெல்லாம் மாறும். அடிமனதில் தன்னம்பிக்கை துளிர்விடும். முடியாது என்று நினைத்து ஒதுக்கி வைத்த வேலைகளை யெல்லாம் சர்வசாதாரணமாக இனி செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் கணவன் மனைவிக்குள் சின்னச் சின்ன விஷயத்துக்கெல்லாம் பெரிய சண்டை எல்லாம் வந்ததே! வீண் சந்தேகத்தால் தம்பதியர்கள் பிரிந்தீர்களே! அந்த அவல நிலை இனி மாறும். கணவன் - மனைவிக்குள் மனம் விட்டுப்பேசி பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள். உறவினர்கள், வந்த பணமெல்லாம் போன இடம் தெரியாமல் தவித்தீர்களே! கொஞ்சம் கொஞ்சமாக குருவி சேர்ப்பது போல சேர்த்து, சொந்த வீடு வாங்க திட்டம் தீட்டினீர்களே, இனி உங்கள் கனவு நிறைவேறும். உங்கள் ரசனைக்கேற்ற வீடு அமையும். பழைய கடனைத் தீர்க்க புது வழி பிறக்கும். எல்லோரும் நல்லவர்கள் என நினைத்து சிலருக்கு சாட்சிக் கையெழுத்து போட்டு அவதிப்பட்டீர்களே! மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் நீதிமன்றம் வரை சென்று அலைந்தீர்களே! இனி வழக்குகள் சாதகமாகும். கௌரவம் கூடும்.

பிள்ளை வரம் கேட்டு கடுமையாக விரதமெல்லாம் இருந்தீர்களே, இனி பிள்ளைப் பாக்கியம் உண்டு. உங்கள் மகளுக்கு நல்ல வரன் அமையும். பல பெரிய விழாக்களில் கலந்து கொண்டீர்கள். ஆனால் யார் கண்ணிலும் படாமல் கடைசி வரிசையில் உட்கார்ந்திருந்து விட்டு வந்தீர்களே! இனி முதல் வரிசையில் உட்கார வைக்கப் படுவீர்கள். பல விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். பலமுறை பூமி பூஜை போட்டும் பாதியிலேயே நின்று விட்ட வீடு கட்டும் பணி விரைந்து முடியும். ஒதுக்குப் புறமாக புறநகரில் இருந்த இடத்தை விற்று, முக்கிய வீதியில் சொத்து வாங்குவீர்கள். அடிக்கடி மருத்துவத்திற்காகவே அதிகம் செலவு செய்தீர்களே, இனி நோயெல்லாம் பறக்கும். ஆரோக்கியம் பிறக்கும். பழுதடைந்த சொந்த ஊர்க் கோவிலை புதுப்பிப்பீர்கள்.




வியாபாரத்தில் எதற்கெடுத்தாலும் நஷ்டங்களையேச் சந்தித்த உங்களுக்கு இனி லாபமே கிட்டும். பங்கு தாரர்களிடையே இருந்த சண்டை, கருத்து வேறுபாடுகள் நீங்கும். பிரிந்து சென்று தொழில் தொடங்கிய சிலர் மீண்டும் உங்களிடம் வந்து சேர்வார்கள். பகைமை விலகும். புது ஏஜென்சி எடுப்பீர்கள். தேங்கிக் கிடந்த சரக்குகள் விற்றுத் தீரும். பழைய பாக்கிகள் வசூலாகும். உணவு, கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக்ஸ், மூலிகை வகைகளால் அதிக ஆதாயம் அடைவீர்கள். போட்டிகள் குறையும். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

உத்யோகத்தில் எவ்வளவோ உழைத்தும் நல்ல பெயர் கிடைக்கவில்லையே! இனி அந்த நிலைமாறும். அயல்நாட்டுத் தொடர்புடைய நிறுவனத்திலிருந்து நல்ல வாய்ப்புகள் தேடி வரும். சம்பளம் கூடும். இழந்த சலுகைகளைப் பெறுவீர்கள்.

இந்த குருமாற்றம் விழுந்துகிடந்த உங்களை விஸ்வரூபம் எடுக்க வைப்பதுடன் அதிரடி முன்னேற்றங்களையும், அதிக தனத்தையும் தருவதாக அமையும்.

நெருக்கடிகள் வந்தாலும் நேர்வழியில் செல்லும் நீங்கள் பணம், பட்டம் பதவிக்கெல்லாம் பணியமாட்டீர்கள். ஏளனமாக எடுத்தெறிந்து உங்களைப் பேசினாலும், எரிச்சல் அடையாமல் எதார்த்தமாக இருப்பீர்கள்.

இதுவரை உங்கள் ராசிக்கு விரைய வீட்டில் அமர்ந்து நிறைய செலவுகளை தந்த குருபகவான் இப்போது உங்கள் ராசிக்குள்ளேயே நுழைகிறார். ஜென்ம குருவாச்சே! இனி எங்கே நிம்மதியாக இருக்கப்போகிறோம், என அஞ்ச வேண்டாம். நீங்கள் குருவின் ராசியில் பிறந்திருப்பதாலும், குரு தன் சொந்த வீட்டிற்கு வருவதாலும், இந்த குரு மாற்றத்தால் உங்களுக்கு நல்லதே நடக்கும். கெடுபலன்கள் குறையும். எந்த ஒரு வேலையையும் உங்களால் முழுமையாக முடிக்க முடியாது என்பதுபோல ஏளனமாக பார்த்தார்களே! அவர்களுக்கெல்லாம் பதிலடி கொடுக்கும் வகையில் இனி அதிரடியாக செயல்படுவீர்கள். ஆனால் கணவன் - மனைவிக்குள் வீண் சந்தேகங்கள் வரும். அடிக்கடி வாக்குவாதங்களும் வந்துநீங்கும். மனைவிக்கு மருத்துவச் செலவு உண்டு. மனைவிவழி உறவினர்களுடன் கருத்து மோதல்கள் வந்துநீங்கும். பிள்ளைகள் கூட உங்களைப் புரிந்து கொள்ளாமல் பேசினார்களே, இனி உங்கள் ராசியில் வந்தமரக்கூடிய குருபகவான் பிள்ளைகள் ஸ்தானத்தை 5ஆம் பார்வையால் பார்க்க இருப்பதால் பணிவாக நடந்துகொள்வார்கள். உங்களின் மகளுக்கு ஊரே மெச்சும்படி கல்யாணம் நடத்த வேண்டுமென நினைத்திருந்தீர்களே, அது இனி நிஜமாகும். மகனுக்கு வெளிநாட்டில் வேலை கிடைக்கும்.




உடன் பிறந்தவர்களால் ஏகப்பட்ட செலவுகளும் அலைச்சலும் வந்ததே, இனி சகோதர வகையில் உதவி கிடைக்கும். உங்களின் தியாக உணர்வை புரிந்து கொள்வார்கள். தந்தைவழி உறவினர்களிடையே நிலவி வந்த மனக்கசப்புகள் விலகும். வங்கியில் கடன் வாங்கி விருப்பப்படி வீடு கட்டுவீர்கள். அரசாங்க விஷயங்களில் இருந்து வந்த தேக்கநிலை மாறும். அரசு அதிகாரிகளின் உதவி கிடைக்கும். தாயாரின் உடல்நிலை சீராகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கோயில் விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். விலை உயர்ந்த ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்துவந்த பிரச்சனைகளெல்லாம் இனி விலகும்.

உடல் நலத்தில் கவனம் செலுத்துங்கள். ராசிக்குள் குரு நுழைவதால் தலைசுற்றல், பசியின்மை, முன்கோபம், முதுகுவலி, சோம்பல் வந்து நீங்கும். மருத்துவரின் ஆலோசனையில்லாமல் எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டாம். பெரிய பெரிய நோய்கள் இருப்பது போன்ற பிரம்மை இருக்கும். பயந்துவிட வேண்டாம். மெடிக்ளெய்ம் எடுத்துக் கொள்ளுங்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நாடாளுபவர்கள், கல்வியாளர்களின் நட்பு கிடைக்கும். டிரஸ்ட், சங்கம் தொடங்குவீர்கள். சமூக நலப் பணிகளில் ஈடுபடுவீர்கள். சாதுக்கள், சன்னியாசிகளின் தொடர்பு கிடைக்கும். பூர்வீகச் சொத்தை மாற்றியமைப்பீர்கள். வேற்று மதத்தினர், நாட்டினரால் உங்கள் வாழ்வில் மறுமலர்ச்சி உண்டாகும்.

வியாபாரத்தில் கொஞ்சம் நெருக்கடி இருக்கத்தான் செய்யும். போட்டியாளர்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் சில மாற்றங்களை ஏற்படுத்துவீர்கள். வேலையாட்களுடன் இருந்துவந்த மனக்கசப்புகள் விலகும். பலநாட்களாக வராமலிருந்த பழைய பாக்கிகளை இனி விரைந்து வசூலிப்பீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். வாடிக்கையாளர்களைக் கவர புதிய திட்டங்களை அறிமுகம் செய்வீர்கள். உணவு, இரும்பு, ரியல் எஸ்டேட் மற்றும் நீசப் பொருட்களால் கணிசமான லாபம் கிடைக்கும்.

உத்யோகத்தில் அதிகாரிகளை அனுசரித்துப் போங்கள். எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு போராட்டதிற்குப் பின்பு கிடைக்கும். கணினி துறையிலிருப்பவர்களுக்கு சம்பளம் உயரும். அயல்நாடு சென்று வருவீர்கள். ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமை அதிகரிக்கும்.



AGFA DigiControl V6.2.8

**ம**னசாட்சி அதிகமுள்ள நீங்கள், பெற்ற தாயையும், பிறந்த மண்ணையும் முழுமையாக நேசிப்பவர்கள். எந்த வேலையை தொடங்கினாலும் கண்ணும் கருத்துமாக அதே நினைவுடன் இருந்து அதை முடிப்பீர்கள்.

இதுவரை உங்கள் ராசிக்கு லாபவீட்டில் அமர்ந்திருந்த குரு பணத்தை தருவதைப்போல் தந்து பலவழிகளில் செலவுகளையும் தந்து உங்களை திண்டாட வைத்தார். இப்போது விரைய வீடான 12ஆம் வீட்டில் வந்தமரும் குரு பலவழிகளில் உங்களை முன்னேற்றுவார். குரு தன் சொந்த வீட்டில் ஆட்சிபெற்று அமர்வதால் உங்களுக்கு நல்லதே நடக்கும். நிம்மதியாக ஒருநாள் கூட தூங்க முடியாமல் தவித்தீர்களே, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் பல தருமசங்கடமான சூழலில் சிக்கித்தவித்தீர்களே! சொன்ன சொல்லைக் காப்பாற்றமுடியாமல் மனம் வருந்தினீர்களே, பணம் வந்தும் கையில் தங்கவில்லையே, மென்மேலும் கடன் ஏறிக்கொண்டே போகிறதே, அதனை அடைக்கக்கூட வழியில்லையே என வருந்தினீர்கள். இனி குடும்ப வருமானம் உயரும். எதிர்பாராத பணவரவு உண்டு. குடும்பத்தில் எப்போது பார்த்தாலும் சலசலப்புகள் வந்து நிம்மதியில்லாமல் இருந்தீர்களே, இனி சந்தோஷம் நிலைக்கும். குடும்பத்தில் எல்லோரையும் அனுசரித்துப் போவீர்கள். உங்கள் வார்த்தையை அனைவரும் மதிப்பார்கள். கை நிறையச் சம்பாதிப்பீர்கள். பிள்ளைகளின் பிடிவாத குணம் தளரும். உங்கள் மீது பாசமழை பொழிவார்கள். கெட்ட நண்பர்களையும், கெட்ட பழக்கங்களையும் அறவே ஒதுக்கித் தள்ளுவார்கள். உங்கள் மகளுக்கு நல்ல வேலை கிடைக்கும். திருமணத்திலிருந்து வந்த சிக்கல்கள் நீங்கும். நல்ல மாப்பிள்ளை வந்தமைவார். மகன் வேலையில்லாமல் சுற்றிக்கொண்டிருக்கிறாரே எனறு அவ்வப்போது வேதனையடைந்தீர்களே, இனி பொறுப்பு வந்து நல்ல வேலையில் அமர்வார். விலகிச் சென்ற உறவினர்களும், நண்பர்களும் இனி உங்களின் வளர்ச்சியைக் கண்டு தேடிவந்து பேசுவார்கள்.



## மகரம்

சகோதர, சகோதரிகளிடையே இருந்து வந்த மனக்கசப்புகள் விலகும். வெளி வட்டாரத்தில் உங்களைப் பற்றி பெருமையாகப் பேசுவார்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும். உங்களை ஆதரித்துப் பேசுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். வி.ஐ.பி.களின் உதவியும் கிடைக்கும். சம்பாதித்தும் கையில் நாலணா கூட தங்காமல், அடிக்கடி கை மாற்றாகவும் கடன் வாங்கிக் கொண்டிருந்தீர்களே. இனி நீங்கள் மற்றவர்களுக்குத் தருமளவுக்கு வருமானம் உயரும். ஓட்டை வண்டியை வைத்துக் கொண்டு அவஸ்தைப் பட்டீர்களே! இனி புதுரக வாகனத்தில் உலா வருவீர்கள். வெகுநாட்களாக போக நினைத்த புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். அரசியல்வாதிகளுக்கு இருந்து வந்த நெருக்கடிகள் விலகும். அரைகுறையாக நின்றுபோன கட்டிட வேலைகளை இனி விரைந்து முடிப்பீர்கள். வழக்குகளிலும் சாதகமான நிலை காணப்படும். வெளிநாட்டுப் பயணம் நல்ல விதத்தில் அமையும். அக்கம் - பக்கம் வீட்டாருடன் அவ்வப்போது மனஸ்தாங்கள் வந்துபோனதே, இனி நட்புறவாடுவீர்கள்.

வியாபாரத்தில் அனுபவம் மிகுந்த நல்ல வேலையாட்கள் கிடைப்பார்கள். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வாடிக்கையாளர்களின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விலகிச் சென்ற பங்குதாரர்கள் மீண்டும் வந்து சேருவார்கள். கடையை அழகுப்படுத்துவீர்கள்.

உத்யோகத்தில் உங்களைப் பற்றிய அவதூரான பேச்செல்லாம் மாறும். வெகுநாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு இப்பொழுது கிட்டும். வேலை சுமை அதிகரிக்கும். அவ்வப்போது மனச்சோர்வுடன் காணப்படுவீர்கள். சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். அயல்நாட்டுத் தொடர்புடைய நிறுவனத்திலிருந்தும் நல்ல வேலை கிடைக்கும்.

இந்த குருமாற்றம் கைக்கு எட்டியும், வாய்க்கு எட்டாமலிருந்த நிலையை மாற்றுவதுடன் திடீர்முன்னேற்றங்களையும், சிக்கல்களிலிருந்து விடுபட வைப்பதாகவும் அமையும்.



## கும்பம்

பூமிபோல பொறுமையும், சகிப்புதன்மையும் உடைய நீங்கள், காரணகாரியமில்லாமல் எதையும் செய்ய மாட்டீர்கள். கொடுத்துச்சிவந்த கைகளுடைய நீங்கள், பிறர் உழைப்பில் வாழமாட்டீர்கள்.

இதுவரை உங்கள் ராசிக்கு 10ஆவது வீட்டில் உட்கார்ந்து பந்தாடிய குருபகவான் இப்போது அள்ளிக் கொட்டும் 11ஆவது வீட்டில் அமர்கிறார். இழந்த கௌரவம் மரியாதையை மீட்பீர்கள். உங்களைவிட வயதில் குறைந்தவர்களிடமெல்லாம் அவமானப்பட்டீர்களே, சாட்சிக்கையெழுத்து போட்டு சங்கடத்தில் சிக்கினீர்களே!. இனி மனப்போராட்டங்கள் ஓயும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் தவித்தீர்களே. எதிர்பார்த்த பணமும் தக்க சமயத்தில் கிடைக்கவில்லையே, இனி கவலைகள் மாறும். சொன்னபடி காரியங்களை செய்து முடிப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் மனக்கசப்பும், வீண் வாக்குவாதமும், வந்துபோனதே, உறவினர்கள் கூட உங்களுக்குள் கலகத்தை ஏற்படுத்தி னார்களே, இனி அவர்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளுவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். வருமானத்தை பெருக்க வழி காண்பீர்கள். உங்கள் மகளுக்கு எதிர்பார்த்தபடியே நல்ல வரன் அமையும். கடன் பிரச்சனைக்கு இனி அஞ்ச வேண்டாம். பழைய கடனையெல்லாம் கொடுத்து முடிக்கும் அளவிற்கு பணவரவு உண்டு. அதிரடியானத் திட்டங்களை இனி அசுர வேகத்தில் எடுப்பீர்கள். பொறுமையாகக் காத்திருந்த காரியங்கள் கூட இனி வெற்றியில் முடியும்.

சகோதர, சகோதரிகளுக்கு எவ்வளவு செய்தும் நம்மை புரிந்துக் கொள்ளவில்லையே, என நீங்கள் வருந்தினீர்களே, இனி உங்களின் உண்மையான அன்பை புரிந்துக் கொள்வார்கள். மூத்த சகோதரி உதவுவார். விஐபிகளின் நட்பு கிடைக்கும். சோர்வு, மன உளைச்சல் விலகி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். குழந்தை இல்லையே என வருந்திய தம்பதியர்களுக்கு இனி குழந்தை பாக்கியம் உண்டாகும். வீடு, வாகனம் வாங்குவீர்கள். அரைகுறையான நின்ற கட்டிடப் பணிகளும் முழுமையடையும். பூர்வீகச் சொத்திலிருந்த பிரச்னைகள் நீங்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு. உங்களின் கனவுகள் நனவாகும். அரசாங்க விஷயங்களில் இருந்து வந்த பின்னடைவு இனி விலகும். அரசாங்க அதிகாரிகள், கல்வியாளர்களின் நட்பு கிட்டும். ஆடை ஆபரணங்கள் சேரும். கௌரவப் பதவிகள் தேடி வரும். உங்களைக் கண்டு ஒதுங்கிச் சென்றவர்களெல் லாம் இனி வலிய வந்து உறவாடுவார்கள். வெகுநாட்களாகப் போக நினைத்தும், தடைபட்டு வந்த புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் ஆதரவு கிட்டும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

வியாபாரத்தில் எவ்வளவு போராடியும், நஷ்டத்தையே சந்திக்க நேர்ந்ததே! பாக்கிகளை வசூலிக்க முடியாமல் அலைந்தீர்களே! இனி அந்த நிலை மாறும். இனி அதிரடி மாற்றங்களை செய்து எதிரிகளை பின்னுக்குத் தள்ளுவீர்கள். புது வேலையாட்களை பணியில் அமர்த்துவீர்கள். பங்குதாரர்கள் இனி உங்கள் கருத்துகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்பார்கள். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உணவு, எலக்ட்ரானிக்ஸ் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி வகைகளால் லாபம் உண்டு. மறைமுகப் போட்டிகளைப் பந்தாடுவீர்கள். வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும்.

உத்யோகத்தில் அவ்வப்போது இருந்து வந்த பிரச்னைகளெல்லாம் இனி நீங்கும். உயர் அதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு,ச ம்பள உயர்வு எல்லாம் இனி தேடி வரும். அயல்நாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களிலிருந்தும், புதிய வாய்ப்புகள் வந்தமையும். சக ஊழியர்களால் மகிழ்ச்சியுண்டு. திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

இந்த குருமாற்றம் குடத்திலிட்ட விளக்காக இருந்த உங்களை குன்றிலிட்ட விளக்காக ஒளிரவைப்பதுடன் செல்வம், செல்வாக்கையும், சமூகத்தில் உங்களுக்கென்று ஒரு தனி இடத்தையும் தருவார்.




எங்கும், எதிலும் புதுமையை புகுத்துபவர்களே! அவ்வப்போது தீவிர சிந்தனையில் மூழ்குபவர்களே! மனசாட்சிக்கு மாறாக நடந்துகொள்ளாதவர்களே! பணம் வந்த போதும் பண்பாடு கலாச்சாரத்தை விட்டுக் கொடுக்காதவர்களே!

இதுவரை உங்கள் ராசிக்கு 9ஆவது வீட்டில் உட்கார்ந்து அடிப்படை வசதி வாய்ப்புகளை உயர்த்திய குருபகவான் இப்போது 10ஆவது வீட்டில் நுழைவதால் நீங்கள் இனி பணிவாக நடந்து கொள்ள வேண்டி வரும். குடும்பத்தினிடம் மனம் விட்டுப்பேசக் கூட முடியாமல் தத்தளித்தீர்களே! இனி அவர்களுக்காக அதிக நேரம் ஒதுக்குவீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். உங்கள் இருவருக்கு மிடையே கலகத்தை ஏற்படுத்திய உறவினர்கள், நண்பர்களை புறம் தள்ளுவீர்கள். பணப்பற்றாக்குறை விலகும். பழைய கடனையெல்லாம் தந்துவிட்டு சேமிக்கவும் தொடங்குவீர்கள். அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிடாமல் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கப் பாருங்கள். உறவினர்களுக்கு மத்தியில் ஒருபடி உயர்ந்து காணப்பட வேண்டுமென அவ்வப்போது நினைத்தீர்கள், நினைத்தபடி முன்னேறிக் காட்டுவீர்கள். குழந்தை இல்லையென வருந்திய தம்பதியர்களுக்கு இனி குழந்தை பாக்கியம் உண்டாகும்.

பிள்ளைகள் பொறுப்பின்றி நடந்து கொண்டார்களே! மற்ற பிள்ளைகளுக்கு மத்தியில் நம் பிள்ளையும் முன்னேற மாட்டானா! என்று அவ்வப்போது கனவு கண்டீர்களே! இனி நனவாகும். உங்கள் மகனுக்கு அயல்நாட்டில் வேலை கிடைக்கும். மகளின் திருமணத்தை விமர்சையாக நடத்தி முடிப்பீர்கள். உடன் பிறந்தவர்களை உயர்த்துவதற்காக பெரும்பாடு பட்டீர்களே! அதற்கு பயன் இப்பொழுது கிட்டும். இனி உங்களின் தியாக உணர்வை புரிந்துக் கொண்டு மகிழ்வார்கள். பூர்வீகச் சொத்துச் சிக்கல் சுமுகமாக முடியும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். உங்களைப் பற்றி விமர்சனங்கள் கடுமையாக வரும். சாட்சிக் கையெழுத்து யாருக்காவும் இடவேண்டாம். வி.ஐ.பிகளின் நட்பு கிடைக்கும். அவர்களால் தக்க சமயத்தில் உதவி கிடைக்கும். மனதில் பல ஆசைகள் இருந்தும் அதனை நிறைவேற்ற முடியவில்லையே என அவ்வப்போது வருந்தினீர்களே! இனி ஒவ்வொன்றாக நிறைவேறும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வெகுநாட்களாகப் போக நினைத்தும், தடைபட்டு வந்த குலதெவ கோவிலுக்குச் சென்று வருவீர்கள். வேற்று மதத்தினர்கள் பக்க பலமாக இருப்பார்கள். உங்களைக் கண்டு ஒதுங்கிச் சென்றவர்களெல்லாம் இனி வலிய வந்து உறவாடுவார்கள். நட்பு வட்டாரம் விரியும். வருமான வரிக்கணக்கை சரிபார்த்து அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளை உடனே செலுத்துங்கள். நீதிமன்ற வழக்குகளில் அலட்சியப் போக்கு வேண்டாம்.. வெளிநாட்டுப் பயணம் உண்டு. சமுகநலப்பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். அக்கம் - பக்கம் வீட்டாரிடம் இருந்து வந்த மனக்கசப்புகள் விலகும்.

வியாபாரத்தில் உங்களின் ஆலோசனையாக இருந்தாலும், மற்றவர்களின் ஆலோசனையாக இருந்தாலும் இருமுறைக்கு பலமுறை யோசித்து முடிவெடுப்பது நல்லது. புது யுக்திகளைக் கையாண்டு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவீர்கள். வராது என்றிருந்த பழைய பாக்கிகளெல்லாம் இனி வசூலாகும்.

உத்யோகத்தில் உங்களின் திறமைக்கு பலவிதத்திலும் சோதனைகள் வந்ததல்லவா! எத்தனை முறை மேலிடத்தில் சொல்லியும் சம்பளத்தை உயர்த்தவே இல்லையே! அந்த அவல நிலையெல்லாம் மாறும். சம்பள உயர்வுடன் பதவி உயர்வும் உண்டு. கண் எரிச்சல், கழுத்துவலி நீங்கும். தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பார்கள்.

இந்த குருமாற்றம் உங்களின் பலம் பலவீனத்தை உணரவைப்பதாகவும், உங்களைச் சுற்றியிருப்பவர்களின் உள்மனதை அறிந்து கொள்ளும் வாய்ப்பை தருவதாகவும் அமையும்.

# நீங்களும் ஐஸ்வர்யா ராய் ஆகலாம்...



உடல் பருமனை எளிமையான வழியில் குறைக்க ஏதேனும் மருந்து உள்ளதா? உடல் பருமனை மருந்தே இல்லாமல் குறைக்க முடியுமா? காலையில் வாக்கிங் சென்றால் உடல் பருமன் குறையுமா? பத்து வருடத்திற்கு முன் இருந்த எடைக்கக் குறைய இயலுமா? இப்படி அடுக்கடுக்கான கேள்விகளுடனும், யோசனையுடனும் உடல் பருமனாகிவிட்டவர்கள் யோசிக்கிறார்கள். எப்படி இருந்த நான் இப்படி ஆயிட்டேன் என ஏக்கப் பெருமூச்சு விடுகிறார்கள்.

பத்து வருடத்திற்கு முன் எடுத்த போட்டோவில் தன் உடல் அழகையும், உடல் அமைப்பையும் பார்க்கும் முப்பதைக் கடந்த பெண்களும் இப்படித்தான் யோசிக்கிறார்கள்.

உடல் பருமனைப் பற்றியோசித்தால் மட்டும் போதுமா? அதற்கான முயற்சியிலும் ஈடுபட வேண்டுமே! ஈடுபடவும் தயார். ஆனால் உடல எடையை எப்படிக் குறைப்பது?

வாருங்கள். இயற்கை மருத்துவம் வழிகாட்டுகிறது. இப்படி இருக்கிற நீங்கள் அப்படி ஆகிவிடலாம். பத்து பைசா செலவில்லாமல், உங்கள் உடல் எடையை சிக்கென்று வைத்துக் கொள்ள, நீங்கள் உண்ணும் உணவையே மருந்தாக்கும் ரகசியத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். அந்தச் சிதம்பர ரகசியம் இதுதான்

முதலில் உடை எடை அதிகரிப்பின் காரணத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். உடல் எடை கீழ்கண்ட காரணங்களால் அதிகரிக்கலாம். அவை என்ன?

1. அளவுக்கதிகமாய் சாப்பிட்டால் அந்த உணவுகளில் உள்ள கலோரியானது தேவைக்குப் போக, உடம்பில் அதிகளவில் சேமிக்கப்படுகிறது. இதனால் உடல் பருமன் உண்டாகிறது.
2. உடலில் இரத்தச் சிவப்பணுக்கள் குறைந்த நிலையில் உடல் பருமன் உண்டாகிறது.
3. சைனஸ், ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு எடுக்கப்படும் நவீன மருந்துகளின் பின்விளைவுகளினால் உடல் பருமன் உண்டாகிறது.
4. தைராய்டு கோளாறுகளினால் உடல் பருமன உண்டாகிறது.
5. வாயுக்கோளாறுகள், நாள்பட்ட மலச்சிக்கலினால் உடல் பருமன் உண்டாகிறது.
6. பெண்களுக்கு மாதவிடாய் முறையாக வராமல் இருப்பது, குறைந்த அளவில் வெளியேறுவது, கருப்பை சார்ந்த கோளாறுகள் இருப்பது போன்ற காரணங்களால் உடல் பருமன் உண்டாகிறது.

இவை மருத்துவம் சார்ந்த காரணங்கள். இவை இல்லாமல் தொடர்ந்து டி.வி.சீரியல் பார்க்கும் அம்மணிகளுக்குக் கூட உடல் எடை அதிகரிப்பதாகச் சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

ஒருவர் உடலில் கொழுப்புச் சத்து அதிகரித்த நிலையில் உடல் பருமனுக்கு உள்ளாகியுள்ளார் என்று வைத்துக் கொள்வோம். அவருடைய உடல் பருமனை எப்படிக் குறைப்பது.

முதலில் அவருக்கான உணவுப்பழக்கத்தை ஒழுங்கு செய்ய வேண்டும். அவர் விரும்பி உண்ணும் உணவுகளைப் பட்டியலிட வேண்டும். அவர் உணவு எடுத்துக் கொள்ளும் நேரத்தை முறைப்படுத்த வேண்டும். அவர் உண்ண வேண்டிய உணவுகளை வகைப்படுத்த வேண்டும். தவிர்க்க வேண்டிய உணவுகளைப் பட்டியலிட்டுப் பின்பற்ற வேண்டும்.

உடல் பருமன் குறைய கீழ்கண்ட உணவுகளைக் கட்டுப்படுத்துங்கள்

கடலை எண்ணெய், கடலைப் பருப்பு, வடை, போண்டா, பஜ்ஜி, சிப்ஸ் மற்றும் எண்ணெயில் வறுத்தெடுத்த பதார்த்தங்கள் ஒதுக்கப்பட வேண்டியவை.

கோழி, மட்டன், மாட்டுக்கறி, இறால் போன்ற அசைவ உணவுகள் பக்கம் எட்டியே பார்க்கக்கூடாது.

உருளைக் கிழங்கு, வாழைக்காய், சேனைக் கிழங்கு, போன்ற கிழங்கு வகைகள் கண்ணிலேயே படக்கூடாது.

இன்றைய நவீன உணவுகளாய்க் கருதப்படும் பீஸா, பப்ஸ், ஐஸ்கிரீம் போன்றவைகளுக்கு 144 தடை உத்தரவு போட்டே ஆக வேண்டும்

24 மணி நேரமும் இயற்கைக்குப் புறம்பாய் ஐஸ்வாட்டர், குளிர்பானங்கள் போன்றவற்றை அருந்துவதைத் தவிர்த்தல் ரொம்ப உத்தமம்.

உணவருந்தும் வேளையில் நொறுக்குத் தீனியை உண்ணும் பழக்கத்தைத் தவிர்த்தல் மூலம் கரியாகும் காசை மிச்சப்படுத்தலாம்.

போதை தரும் பீர், பிராந்தி, ஒயின் வகைகளைத் தவிர்த்தல்

டின்களில் அடைத்து விற்கப்படும் உடனடி உணவுகள், பிஸ்கட்டுகள் போன்றவற்றைத் தவிர்த்தல்.

இதுபோன்ற உணவு வகைகளை நிறைய சேர்த்துக் கொள்ளுவது ஐஸ்வர்யாராய் மாதிரி ஸ்லிம் ஆக உதவும் அவை.

மணத்தக்காளி, பொன்னாங்கண்ணி, கரிசலாங் கண்ணி, முருங்கைக்கீரை, பசலைக்கீரை, பருப்புக்கீரை, புதினா, கறிவேப்பிலை, மல்லி இலை போன்ற கீரைவகைகள் நம் உணவில் வந்தனம் கூறி வரவேற்கப்பட வேண்டியவை.

பச்சை சுண்டைக்காய், வெண்டைக்காய், பீட்ரூட், அவரைப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, பீர்க்கம் பிஞ்சு, சோயாபீன்ஸ், காராமணிக்காய், முள்ளங்கி, காலிபிளவர் போன்ற காய்கறிகள் பச்சைக் கொடி காட்டி ஏற்றுக் கொள்ள வேண்டியவை.

திராட்சை, ஆரஞ்சு, பைன் ஆப்பிள், பப்பாளிப் பழம், மாதுளம்பழம், வெள்ளரிப்பழம், தர்ப்பூசணிப் பழம், சாத்துக்குடி, எலுமிச்சை போன்ற பழவகைகள். இவற்றை கண்டிப்பாக பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய உணவுகளைத் தொடர்ந்து நாள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். அப்படியும் உடல் எடை குறையவில்லை? என்று பலர் சொல்லிக் கேட்டிருக்கிறேன்.

அதிக உடல் எடையானது ஒரே நாளில் அல்லது ஒரே மாதத்தில் ஏற்பட்டுவிடுவதில்லை. படிப்படியாகத்தான் உடல் எடை அதிகமாகிறது. அதுபோலவேதான் அதிக உடல் எடையைப் படிப்படியாகத்தான் குறைக்க முடியும். உடனே குறையவே குறையாது.

ஒரே மாதத்தில் 10 கிலோ முதல் 25 கிலோ வரை உடல் எடையைக் குறைப்பதாகக் கவர்ச்சியாக மாடல் விளம்பரம் தருவார்கள். நாமும் கவர்ச்சி விளம்பரத்தால் உந்தப்பட்டு மருந்துகள் வாங்கிச் சாப்பிட்டுப் பார்ப்போம். ஆனால் ஒரு கிலோ கூட உடல் எடை குறைவதில்லை.

ஒன்று மட்டும் புரிந்து கொள்ளுங்கள். உணவால் முடியாத காரியம் மருந்தால் முடியாது. ஏனெனில் உணவே மருந்து; மருந்தே உணவு. உடல் பருமனைக் குறைக்க ஆசைப்படுபவர்கள் கீழ்க்கண்டவாறு மிகச் சிறந்த பலன் கிடைக்கும்.

## காலை உணவு

காலை உணவைக் கண்டிப்பாக ஒன்பது மணிக்குள் உண்ண வேண்டும்.

மணத்தக்காளி, கரிசலாங்கண்ணி, பொன்னாங் கண்ணி, முருங்கைக்கீரை – இவற்றில் மிளகு, சீரகம், பூண்டு, வெங்காயம், மஞ்சள் தூள், சிறிது உப்பு சேர்த்து, தேவையான தண்ணீருடன் கொதிக்க வைத்து 200 மிலி அளவில் காலை உணவாகக் கொள்ளவும். இந்த சூப்பினால் உடம்பில் சேமித்து வைக்கப்பட்டுள்ள அதிகபட்ச கொழுப்பு கரைந்து, நீராய்ப்பிரியும். இதேபோல் ஆறு முதல் எட்டு மாதங்கள் கடைப்பிடிக்க வேண்டும். வாரத்தில் ஐந்து நாட்கள் கீரை சூப் மட்டும் பருகவும். வாரத்தில் இரண்டு நாட்கள் காலை உணவாக மாதுளை ஜூஸ் மட்டும் பருகவும்.

## மதிய உணவு

மதிய உணவைக் கண்டிப்பாக பகல் 1.30 க்குள் உண்ண வேண்டும். காலையில் கீரை சூப் மட்டும் அருந்தியிருப்பதால் நல்ல பசியிருக்கும். திருப்தியாகச் சாப்பிடுங்கள். சாப்பாடு– சாம்பார் – ரசம் – சேர்க்கக்கூடிய காய்கறிகள் – கீரைகள் – பழங்கள் அனைத்தும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

## இரவு உணவு

இரவு உணவைக் கண்டிப்பாக 7.30 மணிக்குள் உண்ண வேண்டும். இட்லி, இடியாப்பம், சப்பாத்தி – இவற்றையே உணவாகக் கொள்ளலாம். அல்லது சேர்க்கக்கூடிய பழங்கள், ஒரு டம்ளர் பால் மட்டும் சாப்பிடலாம். இரவு உணவை முடித்தபின் தண்ணீர் தவிர வேறெதுவும் விடியும் வரை சாப்பிடக்கூடாது.

இரவு உணவுக்கும், காலை உணவுக்கும் இடையே குறைந்த பட்சம் 12 மணிநேரம் இடைவெளி இருக்க வேண்டும்.

இத்தகைய உணவு வரையறைச் சுழற்சி சரியாக 6 முதல் 8 மாதங்கள் வரை இருந்தாலே, சராசரி உடல் எடைக்குத் திரும்பிவிடலாம். இந்த உணவு முறை சுழற்சியைக் கடைப்பிடிக்கும் பொழுது மிகுந்த களைப்பு உண்டானால், பத்து நாட்களுக்கு ஒரு முறை இயல்பான உணவுமுறையை மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து மேற்கொண்டு, மீண்டும் இந்த முறைக்குத் திரும்புங்கள்.

வேர்க்கடலையைக் கொறித்துக் கொண்டு நடைபயிற்சியை மேற்கொண்டால் உடல் பருமன் குறையவே குறையாது. எளிதான உடற் பயிற்சியுடன் மேற்கண்ட உணவுமுறை சுழற்சியைப் பழக்கப்படுத்துங்கள். கண்டிப்பாக உடல் எடை குறையும். ●

## நயினை முத்துச்சுவாமியார் கோயில் நயினாதீவு

# ஸ்ரீ சோமஸ்கந்த ஈஸ்வரம்

**அமைவிடமும் நிர்வாக அலகும்**

நயினாதீவு 5ஆம் வட்டாரம் மேற்குப்பகுதியில் நன்னீர்க்கிணறுகளும், சுனைகளும் அமைந்த சூழலில் காட்டுக்கந்தன் ஆலயத்தின் மேற்குப்புறமாக அமைந்துள்ளது. இந்த சமாதிக்கோவில் தீவுப்பகுதி தெற்குப் பிரதேச செயலர் வேலணை நிர்வாக அலகாகும்.

**தோற்றம்**

நயினாதீவு சாமியார் என்று எல்லோராலும் போற்றப்பட்டு யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடியில் இருந்து தனது தவத்தாலும், சித்தாலும் பலருக்கு அருளாசி வழங்கி வந்த சுவாமிகள் 1949–01.26ல் சமாதியானார். இவர் தம் பக்தர்களுக்கும், உறவினர்களுக்கும் சமாதியாகும் முன் சுவாமிகள் இட்டிருந்த கட்டளைப்படி அவரின் திருவுடலை நயினாதீவுக்கு எடுத்துவந்து சமாதி வைத்தார்கள். நான்கு புறமும் வாசலைக் கொண்ட பண்டிகையுடனான ஒரு கோயிலை அமைத்து சமாதியை அமைத்தார்கள். கோவில் பிரதான மண்டபம் மேற்குப் பார்த்த நிலையில் அமைக்கப்பட்டிருந்தது. கோவிலின் முகப்பில் வேம்பும், அரசும் பின்னிப்பிணைந்த நிலையில் பாரிய விருட்சமாகவுள்ளது.

**தங்கமயமான தெய்வீக விக்கிரகங்கள்**

லிங்கம், சிவன், பார்வதி, சோமஸ்கந்தர், விநாயகர், முருகன் போன்ற அருள் மூர்த்திகள் அருள்பாலிக்க ஒளிபரப்பிக்கொண்டிருகிறது இத்தலம்.

**அதிசயமான நீர் ஊற்றுக்கள்**

நயினை வாழ் மக்களுக்கும், ஸ்ரீ நாகபூஷனி அம்பாளை தரிசிக்கவரும் பல்லாயிரக்கணக்கான அடியார்கட்கும் குடநீரை குறைவின்றி வழங்கும் நன்னீர்க் கிணறுகளும், அணைகளும் அமைந்த சூழல்தான் இந்த ஆலயம். ஆலயம் அமைந்துள்ள நிலப்பரப்பு சுவாமிகளால் அமைக்கப்பட்ட (கங்காதரணி என்னும் தீர்த்தமாகும்) புனிதமான சுனையுடன் அமைந்த தீர்த்தக்கிணறும், தீர்த்தக்கேணியும் அலைமோதும் இந்துமாகாசமுத்திரத்தின் கரையில் அமைந்திருப்பதும், ஆண்டுதோறும் ஸ்ரீ நாகபூஷனி அம்பாள் வந்து தீர்த்தம் ஆடுவதும் இந்த புனிதமான சுனையில்தான் என்பதும் உண்மை.

**சுவாமிகளின் கனவும் நினைவும்**

சுவாமிகள் ஒரு சிவாலயம் அமைக்கவேண்டும் அதன் அருகே ஓர் தீர்த்தக்கிணறும் அமைக்கவேண்டும் என்று எண்ணி பணிகளையும் ஆரம்பித்து தனது நேரடிப்பார்வையில் செயலாற்றி வந்தார். சிவன்கோயில் கருவறையும், பண்டிகையும் திருக்குளமும் பூர்த்தியாகும் நிலையில் சுவாமிகள் சமாதியானார். சிவப்பணி நின்றது. இன்று சிவாலயம் இடிந்து அழிந்துவிட்டது. அந்த இடத்தில் இன்று ஓர் சூலத்தை வைத்து அச்சூழலில் உள்ள மக்கள் வழிபடுகின்றார்கள். ஆனால் 1960இன் பின் அம்பாள் தீர்த்தம் ஆடும் புனித தீர்த்தமாக சுவாமிகள் அமைத்த திருக்குளம் அமைந்துள்ளது. ஆண்டுதோறும் திருவிழாவன்று கிராமவலம் வரும் நயினை ஸ்ரீ நாகபூஷனி அம்பாள் பல்லாயிரம் அடியார் புடைசூழ வந்து, ஸ்ரீ முத்துலிங்கேஸ்வரர் கோவிலில் நடைபெறும் பூரண கும்பபூசை வழிபாடுகளை ஏற்ற பின்பே தீர்த்தக்கேணிக்குச் சென்று தீர்த்தம் ஆடி அருள் புரிவதுடன், இத்தீர்த்தத் திருவிழாவை செய்து வரும் சுவாமிகளின் அடியார்களால் தீர்த்தக்கேணி மண்டபத்தில் நடைபெறும் விசேட பூசை வழிபாட்டையும் ஏற்று பின் தன் திருக்கோவிலுக்கு எழுந்தருள்கின்றார் உலகமாதா.

**திருக்குட முழுக்கும் விசேட பூசைகளும்**

1950இன் பின் 2003 வரையும் 3 திருக்குட முழுக்கு நடைபெற்றுள்ளது. நயினை சிவஸ்ரீ ஐ.கைலாசநாதக்குருக்கள் இரண்டாவது குடமுழுக்கை மிகச் சிறப்பாகச் செய்துவைத்தார். சுவாமிகளின் குருபூசை வருடம்தோறும் மிகவும் சிறப்பாக நடைபெறும். அன்றைய தினம் சிவலிங்கப் பெருமானுக்கும் ஏனைய தெய்வங்கட்கும் சிறப்பான அபிஷேகமும், பூசைகளும் நடைபெற்றபின் அடியார்கள் அனைவருக்கும் கோவிலின் அன்னதான மண்டபத்தில் அன்னதானம் நடைபெறும். தினமும் ஒரு நேரப்பூசை நடைபெறுகின்றது. நித்தியஜோதி ஆலயத்தில் சுடர்விட்டு எரிந்துகொண்டே இருக்கும்.

**பரிபாலனம்**

சுவாமிகளின் பக்தர்களால் அமைக்கப்பட்ட ஒரு சபை கோவிலின் சகல கருமங்கட்கும் வேண்டிய ஒரு வைப்பு நிதியை வைப்புச் செய்துள்ளது. நேரடி நிர்வாகத்தை சுவாமிகளின் சகோதரரின் பிள்ளைகள் கவனித்து வருகின்றனர்.

மடியும் ஒவ்வொரு நிமிசங்களிலும் பாதாளத்தின் நடுவே மெல்லிய கயிற்றில் தொங்குவதானதொரு உணர்வையே தருகிறது. வாழ்வின் இழையங்கள் அறுந்துபோனதாகவும் எதிலுமே பிடிப்பில்லாததான விசனமுற்ற நாட்களாகவுமே கழிகின்ற பொழுதுகள்தான் தொடருகின்றன.

யாருடனும் கொஞ்சநேரமாவது மகிழ்ச்சியாகப் பேசவே இயலாத இந்தப் பொழுதுகளில் இப்போதே மரித்துவிட வேணுமென்பதாய் மனசு அலைகிறது. நிம்மதியைத் தொலைத்த நீளும் இரவுகளில் சிலுவை சுமக்கும் கல்வாரிப் பயணமெனத் தைக்கிறது படுக்கை.

இப்படித் தூக்கத்துக்காய் கிடந்து தவிக்கும்போதெல்லாம் தொலைந்துபோன அந்த இனிமையான பொழுதுகள்தான் நினைவுக் குமிழ்களாய் நெஞ்சில் கசிகிறது.

ஏ.எல். பரீட்சை எழுதிவிட்டு றிசல்ற்றுக்காய் காத்திருந்த அந்த நாட்களில் கூடிக்கூடித் திரிந்து களைத்துப்போனபோது கடலையும் பனங்கிழங்கும் வாங்கிக்கொண்டு வந்து, நீண்டு நிமிர்ந்த அந்தப் பனைகளின் நடுவே வளைத்திருந்து சாப்பிடும் அலாதி சுகம் எப்போது எங்களை விட்டுப்போனது என்பதை இப்போதும் நினைத்துப் பார்க்கிறேன்; கனத்துப் போகும் நெஞ்சில் இரத்தம் கசிவதாய் எங்கோ தாளாத வலிதான் ஏற்படுகிறது.

கிராமக்கோட்டுச் சந்திக்குப்போகும் மெயின் ரோட்டில் இருந்து இருநூறு யார் தள்ளிக் கிடக்கும் வெட்டைவெளியில் வெயில் வெயிலாய் கிறிக்கற் ஆடியபடி சிறுவர்கள் குதூகலிப்பர். பனைகளின் கீழே விரிந்து போய்க்கிடக்கும் நிழலில் நாங்கள் ஒருவரை ஒருவர் கிண்டலடித்துக் கொண்டே நீண்ட நேரமாக உட்கார்ந்திருப்போம். மாலை வரும்வரை யாருமே அந்த இடத்தை விட்டு நகரவே முடியாதளவுக்குச் சுவாரஸ்யமான விடயங்களெல்லாம் சம்பாஷனைகளில் வந்து போகும்.

சீலன் தன் சிநேகிதி பற்றி எந்தநேரமும் கதைத்துக் கொண்டேயிருப்பான். அவள்மீது தான் உயிரையே வைத்திருப்பதாகவும், அவளையே கல்யாணம் செய்துகொள்வதாகவும் கூறிக் கொண்டிருந்தான். பீற்றரின் கனவெல்லாம் விழுந்துபோய்க்கிடக்கும் தனது குடும்பத்தின்

# அவர்கள் வருவார்கள்

பொருளாதாரத்தை உயர்த்துவதாகவே இருந்தது. என்னென்ன தொழில் செய்தால் முன்னேறலாம் என்பதை ஆலோசித்தபடியே இருப்பான். றிசல்ற்றைப் பார்த்து விட்டு ஏதாவது சொந்தமாய் தொழில் தொடங்கப்போவதாக அவனுக்கு எண்ணம் இருந்தது. சுரேசுக்கு எந்த விதமான ஐடியாக்களும் இல்லாமல் எதற்கெடுத்தாலும் சிரித்தபடியே இருப்பான். அப்பாவி.

ஆனால் பின்னாளில் கூட்டைப்பிய்த்தெறிந்து குருவிகள் கலைந்து பிரிந்து போனது மாதிரி எவ்வாறெல்லாம் ஒருவரை ஒருவர் அறியாதபடிக்கு கண்காணாத தூரங்களிலெல்லாம் தொலைந்து போனார்கள்.

இப்போதும் அந்த வெளியில் அடித்த பந்தை எடுக்கச் சிறுவர்கள் ஓடுவதாகவும்; கிராமக்கோட்டுச் சந்திக்குப் போகும் தெருவில் சந்தையால் போகும் கதிரேசு மாமா கள்ளுக்குடித்த உற்சாகத்தில் காத்தவராயன் பாட்டுப் பாடிக்கொண்டு போவதுபோலவும்; கீக்கிறீக்.. கீக்கிறீக் என்று அவரது சைக்கிள் சத்தம் காதில் ஒலிப்பதாகவுமே படுகிறது!

மீண்டும் மீண்டும் அந்தப் பனைகளும் அவற்றுக்கப்பால் விரியும் வெளியும்தான் ஞாபகத்தில் படர்கிறது.

இப்போது அந்தக் கிறிக்கற் சிறுவர்கள் எங்கெல்லாம் சிதறிப் போனார்களோ..? அதில் எத்தனை பேர் காணாமல்போனோர் பட்டியலில் இடம் பிடித்தார்களோ..?

எங்கள் ஊருக்கு இராணுவம் வந்தபோது முதன் முதலில் அந்தப் பனைகளின் நடுவேதானாம் சென்றி போட்டு உட்கார்ந்தது. பின் ஒவ்வொரு பனையாய்த் தறித்து பெரிய பண்டும் பங்கரும் அமைத்து நிரந்தரமாய் தன் இருப்பைப் பலப்படுத்தியபோது அந்த இராணுவ மினி முகாமைச் சுற்றியிருந்த ஏராளமான வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன.

இதைக் கேள்வியுற்றதும் தான் சிறுகச் சிறுகச் சேமித்துக் கட்டிய வீடு இப்படிப் போனதே என்று அப்பா அதிர்ந்து போனார். அவரைப் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கு நாங்கள் ஏகப்பட்ட பிரயத்தனங்கள் செய்ய வேண்டியிருந்தது.

வெளியில் உயிரை உறைய வைக்கும் பீதியைத் தருவதாய் இருள் கவிந்து கிடக்கிறது. எங்கும் நிசப்தமே நிலவுகிறது. இந்த நாய்கள் கூட இப்போது குரைப்பதை நிறுத்தி விட்டனவோ என்றே நினைக்கத் தோன்றுகிறது. சரி, இந்த முறுத்து வேப்பமர வெளவால்கள் எங்கே போய்த் தொலைந்தன. முந்தியெண்டால் வேம்பம்பழக்

காலத்துக்கு எங்கிருந்துதான் அப்படி வருகின்றவோ; கொள்ளை கொள்ளையாய் வந்து மரத்தில் மொய்த்துக்கிடந்து கத்தலும் சடசடப்புமாகவே இரவிரவாகத் தொல்லைகள் கொடுப்பன.

இப்போது எங்கேயும் அவற்றின் அசுகைகூடத் தெரிவதில்லை. அதுகள்கூட எங்காவது தொலை தூரங்களுக்குப் புலம்பெயர்ந்து போய்விட்டனவா? அல்லது ஓசைபடாமல் வந்து தங்களின் கருமங்களை முடித்துக்கொண்டு போய்விடுகின்றனவா?

எதுவுமே நிலையற்றதாகிப்போன துயர்தரும் வாழ்வு. நாளைய இருத்தல் என்பது நிச்சயமில்லாதபோது எதிலுமே லயிப்பற்ற ஜடமாகத்தானே நடமாடமுடிகிறது.

முன்னரென்றால் எங்கள் ஊர் ஆழ்வார் கோயில ஆவணி மாத்தில் வரும் கடைசி மூன்று தினங்களும் விடிய விடியத் திருவிழாவில் மூழ்கிக் கிடக்கும். சுற்றுப்புறமெல்லாம் ஒளி வெள்ளத்தில் பளிச்சிடப் பட்டுச் சாறிகள் மினுங்கும். நாலுமுழ வேட்டிகளோடு நாலைந்து பேராய் அந்த ஜன நெரிசலில் உலாவருவதே சுவர்க்க சுகம். அவ்வாறான ஒரு வருடத் திருவிழாவில்தான் மனேச்சற்ற மகள் வசந்தனோடு ஓடிப் போனாள். 0கனகம் மாமியின் மகளை வரணியில இருந்து வந்த மாப்பிளை பகுதி இந்தத் திருவிழாவில்தானாம் பெண் பார்த்தார்கள். இன்னம் என்னென்னமோ சங்கதிகள் எல்லாம் அங்கு நடந்து முடியும்.

மூன்றாம் நாள் பொங்கல் வைத்து திருவிழா நிறைவெய்தும்போது மூன்று நாளும் இளசுகள் தாம் பரிமாறிக்கொண்ட பார்வைகளையும், பறிகொடுத்த மனசுகளை மீளப் பெறமுடியாத துயரங்களையும் மீட்டியவாறு வீடு நோக்கிப் போய்க்கொண்டிருப்பர்.

மூன்று நாளும் மாமிசம் உண்ணாது விரதமிருந்து பூசை முடித்த கனபேர் வெறும் மேலுடன் நேரே கள்ளுக்கடை நோக்கித் திருவிழாவில் நடந்த குற்றம் குறைகளைப் பற்றிக் கதைத்தவாறு நடப்பர். வீடு திரும்பும்போது மீனோ இறைச்சிப் பார்சலோ கையில் இருக்கும். இன்னும் சிலர் வெறிச்சோடிப்போன வெளிமண்டபத்தில் இருந்து கூடிக்கதையளப்பர். சிலவேளைகளில் அதில் ஐயரின் தலையும் தெரியும்.

இவையெல்லாம் எம்மை விட்டுப்போய் நெடுநாளாயிற்று.

எங்குபோனாலும் ஐந்து மணிக்குள் வீடு திரும்பும் அவசரம். ஒப்பாரி கேட்டால் உறவுக்கார ரெண்டாலும் விடிந்த பின்பே துக்கம் விசாரிக்கும் துர்ப்பாக்கியம்.

இந்த முன்னிரவில் நிம்மதியற்றுத் தூக்கம் வர மறுக்கும் இந்நிமிசங்களில் யாருமே அறியமுடியாதபடிக்கு என் ஜீவன் கதறுகிறது. ஊ.. ஊ.. என்றிரையும் காற்று பனையோலைகளில் பட்டுச் சரசரக்கிறது. இப்படி வீசும் இந்தக் காற்று மனித வெறியர்கள் குறிவைத்துக் காத்திருக்கும் அந்த முகாமினுள்ளும் உக்கிரமாய் பெரும்புயலென அவர்களை அள்ளுண்டு அடிபட்டுத் திணறடிக்கப் பண்ணுவதாய் வீசவேண்டுமென மனம் அவாவுகின்றது.

இந்த இரவின் அந்தகார இருளில் அந்த முகாமினுள்ளே புகை பிடித்தவாறோ - குரூரம் கொப்பளிக்கும் தொனியில் ஏதாவது கதைத்தும் சிரித்தும்கொண்டே அவர்கள் இருப்பார்கள். சென்றியில் நிற்பவனின் துப்பாக்கி அப்பிராணி ஒருவனைத் தீர்த்துக்கட்டிய பெருமிதத்தில் ஓய்ந்துறங்கும்; அல்லது யாரையாவது குறி வைத்தபடி வெடித்துச் சிதற இருக்கும் அந்தக் கொடூர கண நேரத்துக்காகக் காத்துக்கிடக்கும்.

இன்னும் உள்ளே கிருஷாந்தியைப் போலோ ராஜினியைப் போலோ யாராவது அவர்களின் காம இச்சைக்குக் கதறிக் கதறித் தங்களை இழந்து கொண்டிருக்கலாம்.

இரண்டு நாட்களுக்கு முன்பும் கூட முகாமினுள்ளே யாரோ ஒரு பெண் அலறும் சத்தம் கேட்டதாக ஊருக்குள் பேசிக்கொண்டார்கள். அந்த முகாமிற்கு அவர்கள் வந்த புதிதில் ஊரில் உள்ள சனங்களோடு மிகவும் பண்பாகவே நடந்து கொண்டதாகப் புளுகித் திரிந்தவர்களில் அநேகம் பேரினது உறவினர்கள் அவர்களைத் தேடி ஒரு நாளைக்குப் பல தடவை முகாமை நோக்கி அலைந்து திரிவதுதான் மிகவும் மனவேதனையைத் தருகிறது. சனங்கள் அவர்கள் மேல் எவ்வளவு நம்பிக்கை கொண்டு நடந்தார்கள்.

உயிர்கரையும் இந்த அர்த்த ராத்திரியிலும் சென்றியில் இருந்தவாறு அந்தக் கொடிய விழிகள் யாரை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனவோ; அவர்கள் இந்த இருளை ஊடறுத்துக் கிழித்தவாறோ - இந்த இருளோடு இருளாய்க் கலந்தவாறோ வருவார்கள்.

அவர்களது வரவுக்காய் அந்த மீட்பர்களின் வருகைககாய் இங்கு எத்தனை பேர் காத்துக்கிடக்கிறார்கள்.

அவர்கள் வருவார்கள் என்கிற நினைவே நெஞ்சில் நிறைவைத் தருகிறது.

**முல்லை கோணேஸ்**



# ஐப்பசி மாதப்பலன் (அக்டோபர் 15 - நவம்பர் 15)

- கணித்தவர் : ஜோதிட ரத்னா - லயன். டாக்டர். கே.பி. வித்யாதரன்
37, ... தெரு, தி.நகர், சென்னை - 17. தொலைபேசி : 2434 8877, 24336465

**மேடம்** சிந்தனைவாதிகளே! உங்கள் ராசிநாதன் தொடர்ந்து வலுவாக இருப்பதால் தைரியம் பிறக்கும். தடைபட்டு வந்த பல வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வரவேண்டிய பணம் வந்துசேரும். கணவன் - மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். உத்யோகத்தில் வேலைசுமை குறையும். சகோதரி உதவுவார். வீண் செலவுகளை கட்டுப்படுத்துங்கள். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரித்தாலும் சமாளித்து வெற்றி காண்பீர்கள். பிள்ளைகளின் உடல் நிலை சீராகும். சொந்தம் - பந்தங்களுக்கு மத்தியில் மதிப்பு, மரியாதை கூடும். முற்பகுதி கசந்தாலும் மையப்பகுதியிலிருந்து மகிழ்ச்சிக்கிட்டும் மாதமிது.

**இடபம்** தன்மானமுடையவர்கள்! புதன் உச்சமாகி நிற்பதால் திறமைகள் வெளிப்படும். வழக்கில் வெற்றியுண்டு. உங்களைப்பற்றி தவறாக பேசியவர்களுக்கு பதிலடி கொடுப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். மனைவிவழி உறவினர்களால் உதவியுண்டு. உடன்பிறந்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். வீடு,மனை வாங்க, விற்க இருந்துவந்த சிக்கல்கள் நீங்கும். தாயின் உடல் நலத்தில் அக்கறைக்காட்டுங்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். வேலை யாட்கள் ஒத்துழைப்பு தருவார்கள். பரபரப்புடன் செயல்படும் மாதமிது.

**மிதுனம்** யதார்த்தவாதிகளே! இந்த மாதத்தில் தன்னம்பிக்கை துளிர்விடும். வரவேண்டிய பணமும் வந்துசேரும். வியாபாரத்தை விரிவுபடுத்துவது குறித்து நம்பிக்கைக்குரியவர்களிடம் ஆலோசனை செய்வீர்கள். குடும்பத்தில் தடைபட்ட சுபகாரியங்கள் ஏற்பாடாகும். பிள்ளைகளின் அடிமனதிலிருக்கும் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். தாய்வழி உறவினர்களால் மகிழ்ச்சியுண்டு. வயிற்றுவலி,கண் எரிச்சல் நீங்கும். நினைத்ததை முடிக்கும் மாதமிது.

**கடகம்** சிந்தனைச்சிற்பிகளே! மாதத்தின் முற்பகுதி பரபரப்பாக இருந்தாலும், பிற்பகுதியில் மட்டும் செலவினங்களும், அலைச்சலும் வந்துபோகும். கணவன் - மனைவிக்குள் இருந்துவந்த மனக்கசப்புகள் நீங்கும். குடும்ப வருமானம் உயரும். விலையுயர்ந்தப் பொருட்களை வாங்குவீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி கொடுப்பீர்கள். பயணங்களால் அலைச்சல் உண்டு. அம்மாவின் உடல் நிலை சீராக இருக்கும். தடைபட்ட திருமணம் முடியும். உத்யோகத்தில் தடைபட்ட பதவியுயர்வு கிடைக்கும். உற்சாகம் பொங்கும் மாதமிது.

**சிம்மம்** வெள்ளை மனசுக்காரர்களே! எடுத்த காரியங்களை கொஞ்சம் இழுபறிக்குப் பின்னர் முடிக்க வேண்டி வரும். குடும்பத்தினருடன் மனம்விட்டுப் பேசிவிடுங்கள். யாரையும் நம்பி முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டாம். உடன்பிறந்தவர்களால் வீண் அலைச்சல் அதிகமாகும். வியாபாரத்தில் பெரிய முதலீடுகள் வேண்டாம். வேற்று மதத்தினரால் நன்மையுண்டு. உத்யோகத்தில் வேலைபளு அதிகரிக்கும். பயணங்கள் அலைச்சல் தருவதாக அமையும். வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை. தன்னடக்கமும்,பொறுமையும் தேவைப்படும் மாதமிது.

**கன்னி** இனிமையானவர்களே! அரை குறையாக நின்ற பல வேலைகள் உடனே முடியும். பணவரவும் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். உத்யோகத்தில் உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்பங்கள் அமையும். வேற்று மதத்தினரால் நன்மையுண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். புதிய பங்குதாரர்களைச் சேர்ப்பீர்கள். தாயின் உடல் நலனில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். அவ்வப்போது முன்கோபம், மன உளைச்சல் வந்துபோகும். சகோதரவகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கனவுகள் நனவாகும் மாதமிது.

**துலாம்** கொள்கையாளர்களே! வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். குடும்பத்தில் நிலவிவந்த சண்டைசச்சரவுகளுக்கு முடிவு கட்டுவீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். சகோதரி உதவுவார். வியாபாரத்தில் சுமுகமான லாபம் உண்டு. வேலையாட்கள் ஒத்துழைப்பு தருவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. தலைவலி, மூட்டுவலி விலகும். உங்கள் மகளுக்கு எதிர்பார்த்தபடி திருமணம் முடியும். வராது என்றிருந்த பணம் தக்க சமயத்தில் வந்துசேரும். வாகனத்தை மாற்றுவீர்கள். பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் மாதமிது.

**விருச்சிகம்** மன்னிக்கும் மகாத்மாக்களே! சோர்வு நீங்கி சுறுசுறுப்படைவீர்கள். வருமானத்தை உயர்த்தும் வேலையில் இறங்குவீர்கள். பிள்ளைகளின் வருங்காலத்தை மனதிற்கொண்டு முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திக்க நேரிடும். கனவுத்தொல்லை,தூக்கமின்மை நீங்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உடன்பிறந்தவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். வீட்டை விரிவுபடுத்துவீர்கள். உத்யோகத்தில் உங்களை குறை கூறியவர்கள் இனி வலிய வந்து பேசுவார்கள். முன்கோபம் நீங்கும். மனநிறைவுடன் காணப்படும் மாதமிது.

**தனுசு** கற்பனைவாதிகளே! பிரபலங்களின் உதவியால் முக்கிய வேலைகளை முடிப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகளை வெல்வீர்கள். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும். கல்யாணப் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் தரும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துக் கொள்வார்கள். மனைவியின் இருந்து வந்த மருத்துவச் செலவுகள் நீங்கும். உத்யோகத்தில் பணிகளில் இருந்த தேக்க நிலையை சீர்செய்வீர்கள். மகிழ்ச்சி தங்கும் மாதமிது.

**மகரம்** பட்டுணர்ச்சியாளர்களே! இழுபறியாக இருந்துகொண்டு முடியுமோ, முடியாதோ என்று மனதை உறுத்திக் கொண்டிருந்த சில காரியங்கள் இந்த மாதத்தில் முடிவுக்கு வரும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சிகரமாக அமையும். வியாபாரத்தில் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாட்களின் ஆதரவு கிட்டும். உங்கள் மகளுக்கு நல்ல இடத்தில் வரன் அமையும். தூக்கமின்மை, வயிற்றுவலி நீங்கும். உத்யோகத்தில் மேலதிகாரியின் அன்புக்கு பாத்திரமாவீர்கள். வாகனத்தை சீர்செய்வீர்கள். தைரியமாக முக்கிய முடிவுகள் எடுக்கும் மாதமிது.

**கும்பம்** விடாமுயற்சியாளர்களே! மாதத்தின் முற்பகுதி கொஞ்சம் அலைச்சல் தருவதாக அமையும். வருமானம் ஒருபுறம் இருந்தாலும் செலவுகளும் அதிகரிக்கும். பிள்ளைகளிடையே வீண் கோபத்தைக் காட்டாதீர்கள். அன்பாக சொல்லி புரிய வையுங்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். பயணங்களால் கையிருப்பு கரைந்தாலும் ஆதாயம் உண்டு. தள்ளிப்போன சில காரியங்களை இனி விரைந்து முடிப்பீர்கள். உத்யோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். நிதானித்து சாதிக்கும் மாதமிது.

**மீனம்** சுறுசுறுப்பானவர்களே! இந்த மாதத்தில் தடைகளை தகர்த்தெறிவீர்கள். குடுத்தில் நிலவிவந்த குழப்பங்களுக்கு தீர்வு கிடைக்கும். எதிர்பார்த்தபடி பணவரவு உண்டு. தாயின் உடல் நிலை சீராகும். பழைய கடனை பைசல் செய்வீர்கள். அதிரடியான திட்டங்களால் அனைவரையும் ஆச்சர்யப்படுத்துவீர்கள். உத்யோகத்தில் மேலதிகாரியின் பாராட்டை பெறுவீர்கள். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. பங்குதாரர்களின் ஒத்துழைப்பு கிட்டும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். வாகனத்தால் இருந்துவந்த செலவுகள் குறையும். புதிய பாதையில் பயணிக்கும் மாதமிது.


தரமான தங்கத்தை வாங்குங்கள்...
தரமான தங்கம் வாங்குவதற்கு
சிறந்த இடம்
Wembleyயில்
Tharani
Jewellery
54 Ealing Road
Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777


ஐரோப்பிய, மத்திய கிழக்கு நாடுகளில்
24 மணி நேரமும்
ஒளிரும் தமிழ் தொலைக்காட்சி
செய்திகள்
காலைக்கதிர்
சின்னத்திரை தொடர்கள்
அரசியல் ஆய்வு விவரணங்கள்
மகளிர் – சிறுவர் நிகழ்ச்சிகள்
நீங்களும் நாங்களும் இணையும் பல நிகழ்ச்சிகள்
இசை நடன நிகழ்ச்சிகள்
புத்தம் புதிய திரைப்படங்கள்
ஆண்டுக்கான சந்தா பணம்
£60 மட்டும்
உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி
DEEPAM TV
EAST WEST BROADCAST LTD
UNIT 1, EBURY BUSINESS CENTRE
161-163, STAINES ROAD
HOUNSLOW, MIDDLESEX TW3 3JB, U.K.
Tel : +44 (0) 208 8146565
Fax : +44 (0) 208 8141144
Email : info@deepamtv.tv
Web : www.deepamtv.tv



இளைய கானக்குயில் 2007

இலண்டன்
கிரீன்போல்ட்
மண்டபத்தில்
அக்டோபர் 20ஆம் தேதி
நடைபெறும்.
தொடர்புகட்கு :
020 8390 5823

வெம்பிளியில் ஓர் உன்னதமான
மளிகை கடை

# MALAR SUPERMARKET

543- High Road, Wembley
Middlesex, Hao 2 DJ
Tel : 020 8795 5797

உங்கள்
சகல தேவைகளையும்
பூர்த்தி செய்கிறது

24 மணி நேர சேவையில்
ஒரு மளிகை கடை

# மலர்
## சூப்பர் மார்க்கெட்


Ayngaran
ஸ்தாபனத்தாரின் அங்கீகரிக்கப்பட்ட
விற்பனையாளர்



கலாநிதி துன்னையூர்
ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்

இந்து மதக்குரு, கவிஞர், ஜோதிடர், எழுத்தாளர் என பன்முக ஆளுமை கொண்ட சிவஸ்ரீ ராம் தேவலோககேஸ்வரக் குருக்கள் **INTERNATIONAL UNIVERSITY FOR MARITAL ARTS** மூலமாக 09.09.2007 அன்று கொழும்பு கலதாரி ஹோட்டலில் வைத்து கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி சிறப்பிக்கப்பட்டு இருப்பது அவரின் பணிகளுக்கு கிடைத்த வெகுமதியாகும். குருக்கள் ஐயாவின் சேவைகள் மென்மேலும் சிறப்புற்று விளங்க தமிழர் தகவல் தமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.




AYNGARAN
AYNGARAN International
Ayngaran Video - Tooting
30 High Street, Colliers wood
London SW 19 2AB
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 540 1500
Fax : 00 44 (0) 208 543 8400
Email : shop@ayngaran.com
Unit 19, Riverside Business Park
Lyon Road, Wimbledn
London SW19 2RL
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 543 4477
Fax : 00 44 (0) 208 543 4466
Email : sales@ayngaran.com
For latest
high quality original
Tamil, Telugu
Malayalam
DVD's & Audio CD's
367 High Street North
East Ham
London E12 6PG
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 471 3111
00 44 (0) 208 471 3133

ESTD 1992
SRIKANTH & CO.
Solicitors & Property Business Centre

Solicitors & Estate Agents

Property Sales, Letting & Conveyancing Under One Roof

We also practise in the following areas of LAW:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing - Commercial
- Landlord & Tenant
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex HA0 2DW
Tel : 020 8795 0648
Fax : 020 8795 0649 / Mob : 07831 195 979

லண்டனில்
பொற்கை
வன்னர்களின்
நிர்வாகத்தில்
இயங்கும்
ஒரே
நகை மாடம்

MIERRA
Jewellery Mart
Gems & Jewellery
34 London Road Tooting London SW 17 9HP
Tel : 020 8648 7750 Mobile : 07958948685
www.meera_jewellery.com

CHANDRA
Super Market & Off Licence
COST CUTTER

உங்களுக்குத் தேவையான சகல விதமான மளிகைப் பொருட்கள், இலங்கையிலும், இந்தியாவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பொருட்கள், கடல் உணவு வகைகள், மரக்கறி வகைகள், பழ வகைகள், மேல்நாட்டு குடிவகைகளுடன் இலங்கை பியர் வகைகளையும் சகாய விலையில் பெற்றுக்கொள்ள ஒரே இடம். ஆடியோ, வீடியோ, சீ.டி, வி.சீ.டி ஆகியவற்றை விற்பனைக்கும் வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

Tel : 020 8333 8680
209 - 211 Bromley Road
Catford
London SE6 2PG



கடந்த இருபத்தைந்து ஆண்டுகளிற்கு மேலாக நாம் பிறந்த மண்ணிலும் புலம்பெயர்ந்த பிரித்தானிய மண்ணிலும் தமிழ் அவைக்காற்றுக் கழகத்தின் ஊடாக தொடர்ந்த நாடகப்பணியாற்றிவரும் பாலேந்திரா – ஆனந்தராணி தம்பதிகள் சென்ற மாதம் தங்களின் திருமண வெள்ளிவிழாவைக் கொண்டாடியார்கள்.


இலண்டனில் தரமான தங்கத்திற்கு
Lakshmís
JEWELLERS
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448


Vaani
Cash & Carry
விரைவில்
பிரமாண்டமாய் ! பிரமாண்டமாய் !
தயாரிப்பாளரிடம் இருந்து
நேரடியாக வாடிக்கையாளருக்கு



உலகின் எப்பாகத்துக்கும் உங்கள் பணம்
பாதுகாப்பாக சென்றடைய
*Eastham* ஸ்ரேசனுக்கு எதிரில்

உடனே எம்மை
அழையுங்கள்

# A1 MONEY TRANSFER

**7 Station Pride East Ham E6 1JD**

**Tel : 0208 503 5446 Mob : 07961406289**

**தொடர்பு : நிரஞ்சன்**

தொடர்ந்து 25 வருட காலம் லண்டன் தமிழர்களுடன்

# லீலா

1981 தொடக்கம் இன்று வரைக்கும் ஐரோப்பா கண்டத்தில்
தொடர்ந்து உன்னத உற்பத்தியில் லீலா தயாரிப்புகள்

ஈழ மக்களின் ரசனைக்கேற்ற சகல உணவுப் பொருட்களுக்கும்

## Leela Exports & Imports

Srilanka

Gold Award Winner N.C.E

**லண்டன் விற்பனையாளர்கள்**

குமரன் ஸ்டோர்ஸ்

**142 - 144 Hoe Street, Walthamstow, London E17 4QR 07739 25 22 23, 07801 86 50 31, 020 8530 3033**

**Anthoorium**
World of Designs
Jewellery & Textiles

For your Jewels,
Gems, Sarees,
Costumes,
Musical Instruments
& Gift Items
please visit us...



102, B Burlington Road
New Malden, Surrey KT3 4NT
Tel : 020 8942 8001
Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales@anthoorium.co.uk

**EVEREST**
Curry King
24 Loampit Hall
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
Breakfast
Lunch Dinner



Sea Food
&
Vegetarian
Specialist

**PRIME FOOD & WINE**
News Papers & Magazines
Off Licence - Grocery
Asian & Sri Lankan Groceries
Fruits & Vegetables
118, Tooting High Street
London SW 17 0RR
Tel : 020 8682 3777



மணங்கவரும்
மளிகைச்சாமான்கள்
மென்பானங்கள்
மதுபான வகைகள்
பழங்கள்
மரக்கறி வகைகள்
மீன், இறைச்சி
என எல்லாவற்றிற்கும்
குறைந்த விலையில்
நிறைந்த
சேவையைப் பெற
எம்மை நாடுங்கள்

உங்கள்
விளம்பரம்
இந்த இடத்தில்
இடம்பெற
£ 35 மட்டும்

**SS ESTATE AGENT**
Sales - Lettings
Mortgages - Business Loans
Tel : 020 8471 7779
Fax : 0871 522 7277
www.ssestate.co.uk

புதிய நிர்வாகத்தின் கீழ்
**Maharasie Jewellers**



122 Loampit Vale
Lewisham
London SE13 7SN
Tel : 020 8691 8888



**Video Audio**
14 Lompait Hill
Lewisham
London SE13

Tamil, Malayalam, Hindi,
Telugu Films, Tele Drama
Devotional Carnatic,
Classical Cd's
Tamil Magazines,
News Papers, Phone Cards






அட்டையில்:

## கர்நாடக இசை அரங்கேற்றம்:
## செல்வி மானசி பாலேந்திரா



செல்வி மானசி பாலேந்திரா சென்ற மாதம் 22ம் திகதி லண்டனில் தனது கர்நாடக இசை அரங்கேற்றத்தை மிகச் சிறப்பாக நிகழ்தினார். பதினேழு வயதான செல்வி மானசி ஈழத்தமிழ் நாடக உலகின் பிரபல்யமான தம்பதிகளான திரு க. பாலேந்திரா திருமதி ஆனந்தராணி பாலேந்திரா தம்பதிகளின் ஏக புதல்வியாவார். திருமதி ரேணுகா சிறியானந்தாவின் சிஷ்சையான மானசி சிறந்த இசை வல்லுனர்கள் முன்னிலையில் மண்டபம் நிறைந்த நண்பர்கள் மத்தியில் தனது அரங்கேற்றத்தை நிகழ்த்தினார். எமது மண் தந்த கர்நாடக இசை மன்னன் திரு மாணிக்கம் யோகேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து மானசியை வாழ்த்தினார். இவரை அட்டையில் பதித்து கௌரவிப்பதில் தமிழர் தகவல் பெருமை கொள்கின்றது.

### வாசகர்களே...

உங்கள் இல்லத்திற்கே தமிழர் தகவலைப் பெற வேண்டுமானால் சுய முகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட (A4 Size) கடித உறையை எமக்கு அனுப்பி வைத்தால் தமிழர் தகவல் உங்கள் வீடு வந்து சேரும்.

இலவச பத்திரிகைகளிலும், தமிழ் தொலைக் காட்சிகளிலும் இந்தியாவில் இருந்து வந்துள்ள ஆஞ்சநேய ஜோதிடம், பத்திரகாளி ஜோதிடம் என்ற விளம்பரங்கள் வந்த வண்ணமாகவே உள்ளது. இந்த ஜோதிடர்களினால் உண்மையில் எமது மக்கள் பயன் பெறுகிறார்களா? ஏமாற்றப்படுகிறார்களா? வாசகர்களே! உங்களின் கருத்துக்களை எழுதி அனுப்பினால் தமிழர் தகவலில் பிரசுரிக்கப்படும்.

புதிய பொலிவுடன் லூசியத்தில்

# கற்பகம்

ஞாயிறுதோறும் உடன்பங்கு
ஆட்டிறைச்சி உட்பட
சகலவிதமான மரக்கறி வகைகள்,
பழவகைகள் உட்பட
சகல தேவைகளுக்கும்
நாடவேண்டிய
ஒரே இடம்







**KATPAGAM**
36, Loampit Hill
Lewisham
London SE 13 7SW
Tel / Fax : 020 8694 8810

துரித பணமாற்றுச் சேவை
ரஞ்சன்
இலண்டன்
36, Loampit Hill Lewisham London SE 13 7SW
Tel : 0795763 9738 / Fax : 020 8311 9304





## Mithus Jewellery

322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792

## Diamonds Palace

76 Tooting High Street
London SW17 ORN
Tel : 020 8767 5333
Fax : 020 8767 5814

செவ்வாய் அன்று விடுமுறை

# BEST FOOD

## Supermarket

364 - 366, Bath Road
Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323

259 - 261, London Road
West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269
Fax : 684 4677

249 Northolt Road
Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933

இந்த மூன்று இடங்களை தவிர
வெம்பிளியில் ஒரு கிளை திறக்கப்பட உள்ளது

செவ்விளநீர் இப்போது
£1க்கு
விற்பனையாகிறது
எங்கள் கிளைகளில்
பெற்றுக்கொள்ளவும்

